விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 19 புதன்கிழமை (02.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## வடக்கின் ஆட்சியைக் கைப்பற்றி மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

### தமிழ்க் கூட்டமைப்பு நம்பிக்கை

(மட்டக்களப்பு)

வட மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் மூலம் இடம்பெயர் மக்கள் எதிர்நோக்கி வரும் இன்னல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வட மாகாணத்தில் விரைவில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் தமது கட்சி போட்டியிடவுள்ளதாகவும் (18 ஆம் பக்கம் பார்க்க)


## அரசியல் சாசனத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது!

### ஜனாதிபதி மகிந்த திட்டவட்டம்

(கொழும்பு)

இந்தியா எவ்வாறான அழுத்தங்களைக் கொடுத்தாலும் 13-வது அரசியல் சாசனத் திருத்தத்தை அமுல்படுத்தி, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கப் போவதில்லை எனவும் சீபா வர்த்தக உடன்படிக்கையில் கையெழுத்திடப் போவதில்லை எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அமைப்பிடம் வாக்குறுதியளித்துள்ளதாக தேசப் (18 ஆம் பக்கம் பார்க்க)

# நவநீதம்பிள்ளையின் கூற்றுக்கு அரசாங்கம் கடும் கண்டனம்!



### எதுவும் கூற முடியாது என அமைச்சர் பீரிஸ் பாய்ச்சல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற யுத்தத்தில் இறுதி நாள்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் அவசியம் என்ற மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கூற்றினை இலங்கை அரசு வன்மையாகக் கண்டிப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இலங்கை விவகாரம் தொடர்பில் அவரால் எதுவும் கூற முடியாது எனவும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கை அகதிகளின் உண்ணாவிரதம் நிறுத்தம்

(கொழும்பு)

மலேசியாவில் கடந்த ஒரு வார காலமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த 61 இலங்கை அகதிகள் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு படகு செல்லும் வழியில் மலேசியக் கடலில் வைத்து கைது செய்யபபட்டு மலேசிய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டனர். (18 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியின் வருகைக்கு முன்னர்

## அரசியல் தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்க கூட்டமைப்பிடம் இந்தியா கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு வரும் முன்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, எதிர்வரும் 8 ஆம் திகதி ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என இந்தியா தெரிவித்துள்ளது.

சீனாவுடன் நடைபெற்று வரும் ஆதிக்கப் போட்டியில் கடும் (18 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் பாடசாலை நண்பனை விடுதலை செய்யக் கோரி மனுத் தாக்கல்

### விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பாடசாலை நண்பரான குணசுந்தரம் ஜெயசுந்தரம் என்பவரை விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று மேல் நீதிமன்றத்தின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான சிராணி திலகரட்ண, கே.சிறிபவன் ஆகியோர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## படிப்பினைகள் நல்லிணக்க குழுவுக்கு அமெரிக்கா பாராட்டுத் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள படிப்பினைகள் நல்லிணக்க குழுவுக்கு அமெரிக்கா பாராட்டுத் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களுக்கும் அமெரிக்கா மகிழ்ச்சி தெரிவித்ததாக அவர் மேலும் கூறினார்.

நேற்று வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது, உள் நாட்டுப் பிரச்சினைகள் தீர்ப்பதற்கு (18 ஆம் பக்கம் பார்க்க)

'சனிக்கிழமை வங்கிச் சேவை' ஆரம்பம்

DFCC வர்தன வங்கி, DFCC வங்கி, யாழ்ப்பாணக் கிளை

அரச, தனியார் ஊழியர்கள், வர்த்தகப் பெருமக்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அனைத்து மக்களின் நன்மை கருதி எமது தினசரி வங்கிச் செயற்பாடுகள் சனிக்கிழமைகளிலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. 05.06.2010 சனிக்கிழமை முதல் சகல சனிக்கிழமைகளிலும் காலை 8.30 மணி முதல் 1.00 மணி வரை எமது வங்கிச் சேவை நடைபெறும் என்பதனை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

DFCC வர்தன் வங்கி

141, K.K.S. ROAD, JAFFNA.

DFCC வங்கி

முகாமையாளர்

# டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை யாழில் பரவலாக முன்னெடுப்பு!

## அனைவரையும் ஒத்துழைக்க அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயின் தாக்கம் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் அடுத்துவரும் 3 மாதங்களுக்கு பல்வேறு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபரினால் சகல திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், வைத்திய சாலை பொறுப்பதிகாரிகள் பல்கலைக்கழக துணைவேந்தர், உயர் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள், மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலருக்கு அறிவித்துள்ளார்.

அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

டெங்குக் காய்ச்சல் இலங்கையில் ஓர் பாரிய சுகாதாரப்பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. யாழ். மாவட்டத்திலும் அண்மைக்காலமாக இந்நோயின் தாக்கம் அதிகரித்துக்காணப்படுகிறது. அண்மையில் பெய்த மழைக்குப் பின்னர் இந்நோயின் பரம்பல் தீவிரம் அடையும் அபாயம் உள்ளது.

டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வலுப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் தேசியமட்டத்தில் ஒரு டெங்குத்தடுப்பு செயலணிக்குழு கடந்த 25ஆம் திகதி அமைப்பட்டுள்ளது.

அவர்களின் ஆலோசனைக்கு அமைய மாகாண, மாவட்ட, பிரதேச கிராமமட்டங்களிலும் டெங்குக்கட்டுப்பாட்டுக்குழுக்கள் அமைக்கப்படவேண்டும். ஒவ்வொரு குழுவும் இலங்கையில் டெங்கு நோயை இல்லாது ஒழிக்கும் இலக்குடன் உறுதியாக செயல்படவேண்டும் என ஜனாதிபதி வலியுறுத்தியதுடன், அவர்களின் செயற்பாடுகள் தேசிய மட்டத்தில் சுகாதார அமைச்சினால், மேற்பார்வை செய்யப்பட்டு, உரிய இடங்களில் கவனத்துக்குக் கொண்டுவரப்படல் வேண்டும் என சுகாதார அமைச்சரும் மேற்படிக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்கள்.

தேசிய டெங்கு கட்டப்பாட்டுச் செயற்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய எதிர்வரும் யூன் 5ஆம் திகதி உலக சூழல் தினத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சம்பிராய பூர்வமாக ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

**முன்னெடுக்கப்பட வேண்டிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்**

- எதிர்வரும் யூன் 5ஆம்திகதி சகல நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் பொது வைத்தியசாலைகளிலும் பொது இடங்களிலும் வீடுகளிலும் சிரமதானப்பணிமூலம் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் துப்பரவு செய்யப்பட்டு அழிக்கப்படவேண்டும். இதற்கு,

நிறுவனங்கள் - நிறுவனத்தலைவர்கள்
வைத்தியசாலை - பொறுப்பு வைத்திய அதிகாரிகள்
பாடசாலை - அதிபர்கள்
பொது இடங்கள் - உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள்
- பிரதேசசெயலாளர்கள்
- பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்
வீடுகள் - உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் பொறுப்பாக இருப்பார்கள்.

- ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையும் வெள்ளிக்கிழமையும் நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களை அழிக்கும் சுத்திகரிப்புப் பணிக்காக அரை மணித்தியாலம் ஒதுக்கப்படவேண்டும். இச் செயற்பாட்டை ஒருங்கிணைக்க ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஓர் ஆசிரியர் பொறுப்பாக நியமிக்கப்படவேண்டும். இச்சிரமதானப் பணியில் பாடசாலை சுகாதாரக் குழுக்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.
- சகல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அரைமணி நேரம் டெங்கு சுத்திகரிப்புப் பணிக்காக ஒதுக்கப்படவேண்டும். இச் செயற்பாட்டை ஒருங்கிணைக்க ஒவ்வொரு நிறுவனத்திலும் ஓர் உத்தியோகத்தர் நியமிக்கப்படவேண்டும்.
- ஒவ்வொரு வீடுகளிலும் காணிகளிலும் வீட்டு உரிமையாளர்கள், குடியிருப்பாளர்களினால் துப்பரவுபணிகள் முன்னெடுக்கப்படவேண்டும்.
- பொதுஇடங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் சிரம்தான முறையில் துப்பரவு செய்து திண்மக் கழிவுகளை அகற்றவேண்டும். கழிவு நீர்வாய்க்கால்களும் கிரமமாக சுத்திகரிக்கப் படவேண்டும்.
- பொது சுகாதார பரிசோதகர்கள் குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதார தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று குடியிருப்பாளர்களுக்கு நுளம்பு பெருகும் இடங்களை இனங்காட்டி சுத்திகரிப்பு பணிக்கான அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும்.
- டெங்கு நோய்பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்குகளை ஏற்பாடு செய்யவேண்டும். ஒலி பெருக்கிமூலம் பொது மக்களுக்கு அறிவிக்கவேண்டும்.
- பராமரிப்பு இன்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் காணிகளை துப்புரவாக்க பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.
- பிரதேசமட்ட டெங்குக்கட்டுப்பாட்டுச் செயலணிக்குழுக்களும், கிராமமட்ட டெங்கு செயலணிக்குழுக்களும் மீள இயங்கவைக்கப்பட்டு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படவேண்டும்.
- இச் செயற்பாடுகள் யாவும் எதிர்வரும் யூன்மாதம் 5ஆம் திகதி முதல் அடுத்த 3 மாதங்களுக்கு ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயைத்தடுக்க அனைவரது ஒத்துழைப்பு மிக அவசியம் என்றுள்ளது. (ச)

## வாள் வெட்டில் குடும்பஸ்தர் காயம்

(கரவெட்டி)

நெல்லியடி கரவெட்டிப் பகுதியில் உறவினர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகாரணமாக இடம்பெற்ற வாள்வெட்டில் இளம் குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

அதேஇடத்தைச் சேர்ந்த எஸ்.எஸ்.அன்ரன் (29 வயது) ஒரு பிள்ளையின் தந்தையே தலையிலும் கையிலும் பலத்த வெட்டுக்காயங்களுடன் படுகாயமடைந்தநிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-3,24)

## கபில் தேவ் சிறப்பான அரைச்சதம்; இறுதிப் போட்டிக்கு நுழைந்தது சென்றல்

(யாழ்ப்பாணம்)

ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட பந்துபரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 2 ஆவது அரை இறுதிப்போட்டியில் யாழ். சென்றல் அணி, கே.சீ.சீ.சீ. அணியை 74 ஓட்டங்களினால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 30 ஓவர்களில் 7 இலக்குகளையிழந்து 204 ஓட்டங்களை பெற்றது. கபில் தேவ் 70, யசின்தன் 39, சலிஸ்ரன் 35 ஓட்டங்களை பெற்றனர். இதில் சுஜீதரன் 3 விக்கெட்டுக்களையும், றொபேசன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

205 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய கே.சீ.சீ.சீ.அணி 22 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப்பெற்றனர். உமாநாத் 26, சசீகரன் 22, கேதீஸ்வரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். றஜீஸ்குமார் 3 விக்கெட்டுக்களையும், சபாதீஸ், சலிஸ்ரன் தலா 2 விக்கெட்டுக்களையும், விமலகாந், யசிந்தன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (ச-5)

## சிறந்த அணிக்கான தெரிவில் யாழ்.சென்றல் அணி முன்னிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டிற்கான யாழ்.நகரில் சிறந்த அணி தெரிவுக்கான நிகழ்வில் ஜொலிஸ்ரார் அணி 16 புள்ளிகளை பெற்று முதலாமிடத்திலும், யாழ்.பல்கலைக்கழக அணி 10 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்திலும், யாழ். சென்றல் அணி, சிறிகாமாட்சி அணி தலா 9 புள்ளிகளைப்பெற்று மூன்றாம் ஆம் இடத்திலும் உள்ளன.

கே.சீ.சீ.சீ. அணி, அரியாலை சென்றல் அணிதலா 6 புள்ளிகளைப்பெற்று நான்காம் இடத்திலும், மானிப்பாய் பரீஸ் அணி, ஸ்ரான்லி அணி, யங்ஸ்ரார் அணி தலா 3 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்திலும், சென்றலைட்ஸ் அணி, நியூஸ்ரார் அணி, பற்றீசியன்ஸ் அணி, மட்டுவில் வளர்மதி அணி, யாழ்.ஜொனியன்ஸ் அணி, திருநெல்வேலிகிரிக்கெட் அணி ஆகியன புள்ளிகள் எதுவும் பெறாத நிலையில் உள்ளன.

கூடிய புள்ளிகளை பெறும் அணி யாழ். நகரில் 2010ஆம் ஆண்டிற்கான சிறந்த அணியாக தெரிவுசெய்யப்படுவதுடன், அவ்வணிக்கு துடுப்பாட்டத்துடன் தொடர்புடையவரின் ஞாபகார்த்தமான வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசாக 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். இப்பரிசில்கள் வி.டி.ஜெயரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டியில் வழங்கப்படவுள்ளது. (ச-5)

## நாடளாவிய ரீதியில் பாடசாலைமட்ட புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்கு தயார் படுத்துவதற்கான முன்னோடி பரீட்சையை ஆசிரியர் வே.நவமோகனின் வழிகாட்டலில் காயத்திரி பப்ளிகேஷன் நிறுவனம் நாடளாவியரீதியில் நடத்தவுள்ளது.

இரண்டுபகுதி வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சை அனுமான வினாக்களைக் கொண்டதாக இருக்கும். இப்பரீட்சையில் திறமையாகச் சித்தியடையும் மாணவர்களுக்கு பரிசில்களும் சித்தியடையும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மாணவர்கள், பாடசாலைகள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் காயத்திரி புத்தகசாலை இல.257/1F, காலிவீதி, வெள்ளவத்தை என்ற முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளவும், விபரங்களையும் 011-4909043 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அதிபர்களுக்கான செயலமர்வு நாளை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான செயலமர்வு நாளை 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண கல்வி வலயத்தில் நடைபெறும் என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

அதிபர்களுக்கான இச் செயலமர்வு நேற்று முதலாம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண விசாரணை அதிகாரி புங்குடுதீவுக்கு நியமனம்



(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு திடீர் மரண விசாரணை அதிகாரியாக இளைப்பாறிய பிரதம எழுது வினைஞரான நமசிவாயம் பிரம்குமார் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்தமாதம் 24ஆம் திகதிக்கு அமுலுக்கு வரும்வகையில் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவருக்கு முன்னர் இவரது தந்தையார் ஆறுமுகம் நவசிவாயம், பெரியதந்தையாரான முருகேசு உடையார் ஆகியோர் புங்குடுதீவு திடீர் மரணவிசாரணை அதிகாரிகளாக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

(அரியாலை)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 91ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்டரீதியாக நடத்தப்படும்;

கரப்பந்தாட்ட, கரம், சதுரங்கம் ஆகிய போட்டிகளுக்காக ஆண், பெண் போட்டியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கரப்பந்தாட்டத்திற்கான விண்ணபப்பபடிவங்களை காவேரி சில்க்ஸ், இல. 48, பெரிய கடைவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் கரம், சதுரங்கத்துக்கான விண்ணபப்பபடிவங்களை ஜெயாஸ் டிஜிட்டல் வீடியோ அன் போட்டோ 203/05, கண்டிவீதி அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் பெற்று எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். (ச-3)


யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

பெண்களுக்கான தனிப்பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளதால் பெண்களும் இக் கற்கைநெறியில் பங்குபற்றலாம்

வகுப்பு ஆரம்பம் - 05/06/2010 நேரம் 1 மணி - காலம் 2 மாதங்கள் -

பதிவுகளை :- 05/06/2010 முன்னர் மேற்க்கொள்ளவும் !!

விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862
(C-359)

# இன்று ஒரு தகவல்

## இளமையாய் இருக்க

"எனக்கு இது நடக்க வேண்டும். அது நடக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்பவர்கள் தான் இந்த உலகத்தில் அதிகம்"

ஆனால் ஒரு விடயம் மட்டும்... நடக்கக் கூடாது என்று தான் எல்லோரும் ஆசைப்படுகிறோம். அது என்ன விடயம்?

வயதாகும் விடயம் தான். வயதாகக் கூடாது என்பது தான் நம்முடைய ஆசை. ஆனால் அது நமது கட்டுப்பாட்டிலுள்ள விடயமில்லை. ஆனால் ஒன்று...

வயதானாலும் இளமையாக இருக்க முடியும். அது நம் கையில் தான் இருக்கிறது.

சரி... நீண்ட நாட்கள் இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கு என்ன வழி?

இதற்கு நிபுணர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

முதலாவது விடயம்– உடம்பு குண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அளவான உடம்போடு இருப்பவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். குண்டானவர்களுக்கு நீரிழிவு , இதய நோய் போன்ற நோய்கள் வருவதற்கான வாய்ப்பு அதிகம்.

சரி... உடம்பைக் குறைப்பது எப்படி? சிலபேர் இதற்காக கலோரியைக் குறைப்பதற்கு முயற்சி செய்வார்கள்.

கொழுப்பைக் குறைக்க வேண்டும். அதுதான் முக்கியம். உடற்பயிற்சியும் வேண்டும். பட்டாணி , பருப்பு, தானிய வகையெல்லாம் சாப்பிடலாம். விற்றமின் E,C,A மூன்றும் அவசியம் தேவை. மஞ்சள் நிறமாக இருக்கும் பழங்கள் காய்கறிகளில் பீட்டா கரோட்டின் (விற்றமின் A) இருக்கிறது. மாம்பழம், பப்பாளிப்பழம்,கரட்,கீரைவகை தாராளமாக சாப்பிட வேண்டும்.

உடம்பு,தசை, எலும்பு நன்றாக இருக்க புரதம் அவசியம். ஆனால் அது அதிகமாகிவிட்டால் மந்தமாக,கனமாக உணர்வோம். வயதான காலத்தில் வெயிலில் அதிகமாக அலைய வேண்டாம்.

போதுமான தூக்கம் அவசியம். தூக்கம் குறைந்தால்'டல்' லாகி விடுவோம்.

இந்த உலகத்தில் வயதான பின்பும் ஆரோக்கியத்துடன் சந்தோஷமாகபலர் இருக்கிறார்களல்லவா, அப்படிப்பட்டவர்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார்களாம்.

அவர்களெல்லாம் சும்மா இருப்பதில்லை. தாங்களாக ஏதாவது தொண்டு, தோட்டவேலை ஏதாவது செய்பவர்களாக இருக்கிறார்களாம். இப்படி இருப்பவர்களுக்கு அதிகமான இரத்தம் மூளைக்குப் போகிறது. அவர்களை சுறுசுறுப்பாக இருக்க வைக்கிறது. புத்திக் கூர்மையாக இருந்தால் அவர்கள் நீண்ட நாட்களுக்கு ஆரோக்கியமாக இருப்பார்களாம்.

டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால்... You will stay young if you think young "இளமை எண்ணங்கள் உங்களை இளமையாக வாழவைக்கும்" என்கிறார்கள்.

40 வயது முடிந்தவுடன் நான் வாழ்ந்து முடித்து விட்டேன் என்று பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களில் "இனிமேல் தான் எனக்கு வாழ்க்கையே ஆரம்பம்" என்று சொல்பவர்களும் உண்டு.

எப்பொழுதும் இளமையான எண்ணத்தோடு இருக்கப் பழகிக் கொண்டால் உங்களுக்கு வயதாகிற களைப்பே வராது.

மூச்சை இழுத்துவிடுவது நுரையீரலுக்கு நல்ல பயிற்சி முடிந்தளவுக்கு காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுங்க.

ஒருத்தர் தன்னுடைய 70 வயதில் இப்படி செய்து கொண்டு அதேநேரம் புகைபிடிக்கும் பழக்கத்தையும் விட்டு விடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அப்படியிருந்து விட்டால் அவருடைய நுரையீரல் 40 வயதுக்காரருக்கு உள்ளது போன்று இருக்குமாம். சோம்பல் தளர்ச்சி இருக்காதாம். வயதானவர்கள் களைப்பாக இருப்பதற்கு காரணமே உடம்பிலுள்ள ஒட்சிசன் குறைவது தான். நுரையீரல் நன்றாக இருந்தால் இந்தக் குறைவராது. அதனால் முதுமையை நீங்கள் வெல்ல வேண்டுமா? சத்தான உணவு– தவறாத உடற்பயிற்சி– நல்ல மனநிலை இது மூன்றும் அவசியம்.

ஒரு கடற்கரையில் மூன்று தாத்தாக்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். தங்களுடைய இளமையின் இரகசியம் என்ன வென்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

அந்த மூவரில் கொஞ்சம் இளமையாக தெரிந்த ஒருத்தர் சொன்னார்.

"நான் சின்ன வயதிலிருந்தே சிகரெட் குடிப்பதில்லை. அதனால் தான் இப்பொழுது நான் இப்படி இருக்க முடியுது" என்றார்.

அப்படியானால் இப்பொழுது உங்கள் வயதென்ன? என்று கேட்டார் மற்றவர்.

"80 முடிந்து 81 ஆரம்பம்" என்றார் அவர்.

இன்னொரு தாத்தா சொன்னார்.

நான் சின்ன வயதிலிருந்தே சிகரெட்டும் குடிப்பதில்லை. மதுவும் அருந்துவதில்லை. அதனால் தான் இப்பொழுது நான் இப்படி இருக்க முடியுது" என்றார்.

"உங்கள் வயதென்ன?" என்று கேட்டார்கள் மற்றவர்கள்.

"90 முடிந்து 91 ஆரம்பம்" என்றார்.

கடைசியாக மூன்றாவது தாத்தா சொன்னார். நான் சின்ன வயதிலிருந்தே சிகரெட் குடிப்பேன்– மது அருந்துவேன்– மாமிசம் சாப்பிடுவேன்– எதுவும் தள்ளுபடியில்லை. அதனால் தான் இப்பொழுது நான் இப்படி இருக்கிறேன் என்றார்.

மற்ற இருவருக்கும் ஆச்சரியம்! "அப்படியானால் இப்ப உங்கள் வயதென்ன?" என்று கேட்டார்கள்.

அவர் ரொம்ப நிதானமாக, "இப்பதான் 40 முடிந்து 41 ஆரம்பம்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி வார இறுதியில் வெளியிடப்படுமென அறிவிப்பு

(கொழும்பு)

2010/2011 ஆம் கல்வியாண்டிற்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் இவ்வார இறுதியில் வெளியிடப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடளாவிய ரீதியிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை 22 ஆயிரத்து 800 மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதன் மூலம் கடந்த வருடத்தை விட ஆயிரம் மாணவர்கள் கூடுதலாக அனுமதிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்கள் எக்காரணம் கொண்டும் வேறு பல்கலைக் கழகங்களுக்கு மாற்றப்படமாட்டார்கள்.

இவ்வாறு 2010/2011 ஆம் கல்வியாண்டில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி இவ்வார இறுதியில் வெளியிடப்படும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (5)

# குருநகர்– பூநகரி படகு சேவை இன்று முதல் ஆரம்பமாகின்றது

யாழ். குருநகருக்கும், பூநகரிக்கும் இடையிலான படகுச் சேவை இன்று முதல் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டு படகுச் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளதாவது,

சுமார் ஆறு கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்தப் படகுச் சேவை நடத்தப்படவுள்ளதுடன் முதற் கட்டமாக நான்கு படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தரைவழியாக 2 1/2 மணி நேரம் மேற்கொள்ளும் பயணத்தை படகுச் சேவையின் மூலம் சுமார் 45 நிமிடங்களுக்குள் மேற்கொள்ள முடியும் என்றும் இதன் மூலம் இந்தப்பிரதேசங்ளிலுள்ள மக்கள் பெரும் நன்மையடையவுள்ளனர்.


பஸ் கட்டணத்தை விட குறைந்ததாக பயணமொன்றுக்கு 40 ரூபா மாத்திரமே அறவிடப்படவுள்ளது. வட பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பூநகரி– சங்குப்பிட்டி பிரதேசத்திற்கு சென்று பார்வையிட்ட பின்னர் இந்தப் படகுச் சேவையை வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான பொறுப்பை எடுத்துக்கொண்டாரென வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்தார். (5-4)

## 5 ஆயிரம் குடும்பங்கள் இம்மாதம் மீள்குடியமர்வர்

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள் குடியேற்றத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரம் குடும்பங்களை இம்மாதம் மீள்குடியேற்றத் தீர்மானித்துள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியுடன் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மே மாதத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் கரச்சி கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் 3 ஆயிரம் குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டதுடன் இம்மாதத்தில் 5 ஆயிரம் குடும்பங்களை மீள் குடியேற்றத் திட்டமிட்டுள்ளதாக கிளி நொச்சி அரச அதிபர் குறிப்பிட்டார். (4-5)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த வெள்ளிக்கிழமை உடல் ஊன முற்றோருக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இதில் கற்கோவளத்தை சேர்ந்த ஒருவருக்கு வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை முச்சக்கர வண்டியை வழங்குவதை படத்தில் காணலாம்.

## இராசி பலன்

02-06-2010
(வைகாசி 19, புதன்கிழமை)
பஞ்சமி முற்பகல் 9.59 மணிவரை
திருவோணம் முன்னிரவு 9.37 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
வண்ணை வீரகாளியம்மை கொடி.

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், உறவினர் வருகை, இனிய செய்தி, பிறர் உதவி. |
| இடபம் | வேலைச்சுமை, எதிர்பாராத செலவு, பயந்த சுபாவம், புதிய முயற்சி. |
| மிதுனம் | வாகன பயம், வீண்பகை, முயற்சி தாமதம், போசன சுகம். |
| கடகம் | குடும்ப சுகம், தேகநலன், தொழிலில் ஆர்வம், கீர்த்தி. |
| சிங்கம் | சத்துருஜெயம், உற்சாகம், காரிய நன்மை, பொருள் சேர்க்கை. |
| கன்னி | பணக்குறைவு, அஜீரணரோகம், காரிய இடையூறு, கௌரவக்குறைவு. |
| துலாம் | மனச்சஞ்சலம், சுபசெலவு, புதிய முயற்சி, தாய்வழி உறவு. |
| விருச்சிகம் | நற்கீர்த்தி, இஷ்டசித்தி, போசன சுகம், பிரயாண நன்மை. |
| தனுசு | அதிக செலவு, மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, தொழில் நன்மை. |
| மகரம் | வெகுமானம், மாதர் நட்பு, போசன சுகம், சயன சுகம். |
| கும்பம் | மனச் சோர்வு, முயற்சி தாமதம், பிறருக்கு உதவுதல், தனவிரயம். |
| மீனம் | நண்பர்கள் உதவி, குடும்ப சுகம், எடுத்தகாரியம் கைகூடும், தனவருவாய். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 105 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 70 |
| தக்காளி | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 90 | 100 | 50 |
| கரட் | 130 | 160 | 90 |
| பூசனி | 30 | 50 | 30 |
| புடோல் | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயற்றங்காய் | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 260 | 300 | 90 |
| பீற்றூட் | 80 | 90 | 40 |
| கறிமிளகாய் | 130 | 160 | 70 |
| முருங்கைக்காய் | 200 | 240 | 150 |
| போஞ்சி | 180 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 60 |
| கீரை – 1 பிடி | 30 | 35 | 25 |
| தேசிக்காய் | 80 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின் மலையகக் கல்வித் தரிசனம் 09

நுவரேலியா ஹோம்வூட் தமிழ் வித்தியாலய மாணவர்கள் அந்த மாலைப் பொழுதிலும் யாழ்ப்பாண அதிபர்களுக்காகக் காத்திருந்தனர். தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான அந்த ஆரம்பப் பாடசாலை ரம்மியமான சூழலில் அமைந்துள்ளது.

ஹோம்வூட் வித்தியாலயத்திற்கு அருகில் வீடுகள். அந்த மாலைப் பொழுதில் அவர்கள் எல்லோரும் பாடசாலைக்கு முன்பாகக் கூடி நின்றனர். பொதுமக்கள் அதிகமாக காணப்பட்டது அந்தப் பாடசாலையில் என்று தான் கூறவேண்டும்.



வரவேற்பு நடனம்

77 மாணவர்கள் அங்கு கல்வி கற்கின்றனர். இரா.நல்லுசாமி அந்தப் பாடசாலையின் அதிபராக இருக்கின்றார். மாணவர்கள் பூச்செண்டு வழங்கி அதிபர்களை வரவேற்றனர்.

முன்பு நாம் சென்றிருந்த ஊட்டு வெளி வித்தியாலயத்திற்கு வருகை தந்திருந்த நுவரேலியாக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இரா.இராசரத்தினம் நுவரேலிய கல்விவலய திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சுப்பிரமணியம் நுவரேலியக் கல்வி

பாடசாலைக் கட்டிடம் சிறிதாக இருந்தாலும் அதன் கலைத்துவம் வறுமையிலும் செம்மையென்பதைச் செப்பி நின்றது. அங்கு கற்பிக்கும் ஐந்து ஆசிரியர்களும் மிகவும் உற்சாகமாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

குளிர்பானப் பரிமாறலூடே அதிபர் இரா.நல்லுச்சாமி உரையாற்றினார். அவரின் உரையில் யாழ்ப்பாணத்து ஆசிரியர்களினாலேயே தாம் இந்த உயர் நிலைக்கு வந்ததாக நன்றி கூர்ந்தார்.

யாழ்ப்பாணத்து ஆசிரியர்களின்



மாணவர்களின் கலைநிகழ்வு

வலயத்தில் யுனிசெவ் வேலைத்திட்டத்தினைக் கவனிக்கும் அஜித் ஆகியோரும் ஹோம்வூட் தமிழ்வித்தியாலயத்திற்கு வந்திருந்தனர்.

அஜித் என்ற அந்த சிங்கள இளைஞர் தமிழ்ப்பாடசாலைகளின் அபிவிருத்தியில் காட்டிவரும் கரிசனை பாராட்டப்பட வேண்டியது.

பெயர்களைக் குறிப்பிட்டுக்கூறி அவர்களைத் தெய்வமாக வணங்குவதாகக் குறிப்பிட்டபோது ஆனந்தக் கண்ணீர் எங்கள் கண்களை ஆக்கிரமித்துக் கொண்டன.

பொதுவில் மலையகத்து மக்கள் தமக்குக் கற்பித்த யாழ்ப்பாணத்து ஆசிரியர்களை தெய்வமாக போற்றுவதைக் கேள்வியுற்ற போது எங்கள் யாழ்ப்பாணத்திற்கு இருந்த பெருமையை எண்ணிப் புளங்காகிதமடைந்தோம். அதேநேரம் சமகாலத்து யாழ்ப்பாண மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கும் மரியாதை எத்தகையது என்பதை அனுபவத்தால் உணர்ந்து கொண்டவர்கள் நிச்சயம் வேதனைப்படவே செய்வர்.

அதிபரின் உரையைத் தொடர்ந்து மாலைப் பொழுதிலும் எங்கள் வருகைக்காக அவர்கள் காத்திருந்தமைக்கு நன்றி கூறிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம்.

கதிரவனும் மலைகளில் மறைவதும் எட்டிப் பார்ப்பதுமாகக் காட்சி தந்து தனக்குத் தூக்கம் வருவதை உணர்த்தி நின்றான். பாடசாலைக்கு வெளியில் நின்ற மலையகத்துத் தமிழ்ச்



தேயிலைக் கொழுந்தை நிறுக்கும் பணியில்

விதுரன்

சகோதரர்களிடம் உரையாடினோம். தங்கள் கஷ்டங்களை துலாம்பரப் படுத்தினர்.


உரையாடிக் கொண்டே எங்கள் நடைப்பயணம் தொடர்ந்தது. ஹோம்வூட் வித்தியாலயத்திற்குச் செல்லும் பாதையோரத்தில் தேயிலைக் கொழுந்துகளை நிறுத்தெடுக்குமிடம் இருந்துது. அந்த மாலைப் பொழுதில் மலையகப் பெண்கள் தாம் எடுத்த தேயிலைக் கொழுந்துகள் நிறைந்திருந்த உரப்பைகளை முதுகில் சுமந்து வருவதைக் காண முடிந்தது.

இந்த நாட்டில் பெண்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் இடமென்றால் அது மலையகமென்றே கூறவேண்டும். ஒருகிலோ தேயிலைக் கொழுந்திற்கு பன்னிரண்டு ரூபா கூலியாகக் கொடுக்கின்றார்கள். சராசரியாக ஒருவர் பதினாறு கிலோ தேயிலைக் கொழுந்தைக் எடுக்கமுடியும். அவ்வாறாயின் ஒரு நாளைக்கு 405 ரூபாவை அவர்கள் கூலியாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

நாளுக்குப் பதினாறு கிலோவிற்கு மேலாக கொழுந்தெடுப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். இருந்தும் எல்லா நாட்களிலும் இந்த வாய்ப்பு இருக்குமென்று கூற முடியாது என்று அவர்கள் கூறியபோது, ஒரு வீட்டில் ஆணும் பெண்ணுமாக உழைத்தால் வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதில் இடைஞ்சல் இருக்க முடியாதல்லவா? என்று கேட்டோம்.இந்தக் கேள்விக்கான அவர்களின் பதில் தாமதமாகவே கிடைத்தது. அவர்களின் சிலநிமிட மௌனம் எதற்கானது?

ஆம்...! சாராயக் கடைகள் எங்கள் உழைப்பைத் தின்றுவிடுகின்றன. பின்பு வாழ்க்கைச் செலவிற்கு என்ன செய்ய முடியும்? இவ்வாறு கூறிக் கொண்டே எங்கள் முகங்களைப் பார்த்தனர்.

அந்த முகங்களில் தெரிந்த சோகம் மலையகத்தில் மறுமலர்ச்சி தேவை என்பதை கோடிகாட்டியது. சாராயக் கடைகள் என்று சங்காரம் செய்யப்படுகின்றனவோ அன்றுதான் மலைய மக்களின் உழைப்பு சேமிப்பாகவும் சேமிப்பு முதலீடாகவும் மாறும். அந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். இதைச் செய்வது யார்? இது நடக்குமா? விடைகிடைக்காத வேதனையில் சூரியன் ஒளியிழக்க, நாமும் பஸ் வண்டியில் ஏறிக் கொண்டோம். (வளரும்)



# தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை

# அரசியல் தீர்வில் அடிப்படையாகக் கொள்ளப்படும்

## அமைச்சர் ராஜித சேனாரட்ண

(கொழும்பு)

பிரச்சினையின் அடிப்படையைக் கண்டறிந்து தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன்வைக்கும் அறிக்கையும் தேசியப் பிரச்சினை தீர்வுத் திட்டத்தைக் காணும் செயற்பாட்டில் அடிப்படை விடயமாகக் கொள்ளப்படும் என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ண தெரிவித்தார்.

தேசிய பிரச்சினை தீர்வுத்திட்ட விடயம் குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியாவது,

பிரச்சினையின் அடிப்படையைக் கண்டறியும் நோக்கில் ஏழுபேர் கொண்ட தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவொன்று அண்மையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது.

இந்த தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவானது கடந்த கால பிரச்சினையின் அடிப்படையைக் கண்டறிய ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றது.

இதனையடுத்து குறுகிய காலத்தில் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை அரசாங்கத்துக்கு கையளிக்கப்படும்.

இந்நிலையில் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் செயற்பாட்டின் போது இந்த தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையையும் முக்கிய அடிப்படை விடயமாகக் கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

யுத்தம் முடிந்துள்ள நிலையில் இவ் வாறான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.



அதாவது தென்னாபிரிக்காவில் நியமிக்கப்பட்ட உண்மை கண்டறியும் ஆணைக் குழுவை இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவது சிறந்ததாகும் என அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார். (5-4)

## ஐ.'.பா இந்தியத் திரைப்பட விழா; கொழும்பு போக்குவரத்துமுறையில் மாற்றம்!

(கொழும்பு)

ஐஃபா சர்வதேச இந்திய திரைப்பட விழாவை முன்னிட்டு கொழும்பின் பல பகுதிகளிலும் விசேட போக்குவரத்து நடைமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகததாச உள்ளக அரங்கு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் கொள்ளுப்பிட்டி சினமன் கிரான் ஹோட்டல் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையிலேயே இந்த போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹூலுகல்ல தெரிவித்தார்.

இருப்பினும் இந்த போக்குவரத்து நடைமுறையின் போது வீதிகள் எவையும் மூடப்படமாட்டாது என்று கூறிய அவர், எக்காரணம் கொண்டும் பொதுமக்கள் எவ்வித அசௌகரியங்களுக்கும் முகம் கொடுக்கமாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (5-4)

## வாகனங்களுக்கு 50% இறக்குமதித்தீர்வை உடன் அமுல்படுத்த அரசு நடவடிக்கை

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான இறக்குமதி தீர்வையினை 50 வீதத்தினால் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையிலும் வாகனங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளதே அடுத்தே வாகனங்களுக்கான இறக்குமதி வரி குறைக்கப்பட்

இதேவேளை மின்சார உபகரணங்களின் மேலதிக வரிச்சுமை 15 சதவீதத்தினாலும் குறைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மாருதி கார்களுக்கான இறக்குமதி வரி இன்று முதல் 90 வீதமாக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறித்த கார்களுக்கு 183 வீத இறக்குமதி வரி அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4)


31ஆம் நாளில்....

நீங்கா நினைவலைகள்

மண்ணுலகில் 09 - 09 - 1984

விண்ணுலகில் 02 - 05 - 2010



செல்வன் மகாலிங்கம் சதீஷன்

மாதம் ஒன்று ஓடிமறைந்தாலும்
நீண்டதோர் நீங்கா நினைவுகளுடன்
நிலையற்ற இவ்வுலகில் வாழ்கின்றோம்
வேண்டாம்- இவ்வுலகென்று- ஆண்டவன் தான் உனை அழைத்தானோ
வையகத்தில் வளமோடு வாழ எண்ணி
*கலர்லாப்* திறப்பதற்காய்-கனாக் கண்டாய் - உன்
கனவு நனவாகி கனிகின்ற காலம்வர
சாந்தி செய்வதற்காய் நீ சங்கமித்த வேளையிலே
உன் ஆத்ம சாந்திக்காய் நாம் பிரார்த்திக்க நேர்ந்ததுவோ- அகிலமே
அலறுதையா- உன் அன்றலர்ந்த வதனம் காண்பதற்காய்
சாந்த குணம் கொண்ட சதீஷா- உன் பிரிவுத்துயர் தாங்காது துவழுகின்றோம்.


பிரிவுத்துயரால் வாடும்
அப்பா -அம்மா, சித்தப்பாமார்- சித்திமார்,
பேரன்- பேத்திமார், மாமன்மார் -மாமிமார்,
அக்கா -தங்கைமார் - தம்பிமார்,
மைத்துணன் மார் மைத்துனி மார்,
பெறாமக்கள் -மருமகன்

பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
தும்பளை.
பருத்தித்துறை.

(சி/360)







அபர்ணா குகதாசனின் இசை அரங்கு அண்மையில் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ந.வ.மு. நவரெத்தினம் மங்கல விளக்கேற்றுவதையும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ் சொற்செல்வன் ஆறு.திருமுருகன் உரையாற்றுவதையும் இசை அரங்கு நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## பாடசாலை அதிபர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான டெங்கு விழிப்புணர்வு செயலமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆரம்பித்து வைப்பார்.

இச்செயலமர்வில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (5-4)

## யாழ்.கோட்டை முன்றலில் உலக சுற்றாடல் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தும் உலக சுற்றாடல் தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். கோட்டை முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (5-4)




## பொன்விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தின் பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் 16ஆம் திகதி சனசமூக முன்றலில் சனசமூக நிலையத்தலைவர் ஆறுமுகம் கடம்பன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ் மாவட்ட வீர, வீராங்கனைக்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி. ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி உள்ளூரில் 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி இளைஞர்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி என்பன நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி மாலை ஒரு மணிக்கு பண்டத்தரிப்பு பட்டினசபை கலட்டி மைதானத்தில் இல்லங்களுக்கான மெய்வல்லுநர் போட்டியும் இடம்பெறவுள்ளது.

மேலும் 16ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு பொன்விழா நிகழ்வுகள் மற்றும் நிர்வாக செயற்பாட்டில் ஈடுபட்ட உறுப்பினர்களை கௌரவித்தல் *சாந்தையூரின் பொக்கிஷம்* பொன்விழா சிறப்புமலர் வெளியீடும் பரிசில்வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (5-4)

# யாழ். மாவட்டத்தில் 18 பாடசாலைகளுக்கு உலக வங்கியின் நிதியுதவியில் கணனிகள்

## வடக்கு மாகாண ஆளுநர் வழங்கி வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளுக்கான கணனிகள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சென்பெனடிக் றோ.க.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பக் கல்வி மாணவர்களிற்கு மேம்பாட்டு கணனி கல்வியை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் பாடசாலை ஒன்றிற்கு தலா 4 கணனிகள் வீதம் 18 பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

மேலும் கணனிகள் வழங்கப்படும் அதே பாடசாலைகளுக்கு கட்டட வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது.

அத்துடன் 80 கணனிகள் குறித்த நோக்கத்திற்காக யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கும் வழங்க வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இத்திட்டத்தில் வலிகாம வலயத்தை சேர்ந்த பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், சுழிபுரம் ஐக்கிய சங்கம் சைவ வித்தியாலயம், மானிப்பாய் சோதி வித்தியாலயம், தாவடி இ.த.க. பாடசாலையும்,

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்கலவன் பாடசாலை, மேலைப் புலோலி சைவப்பிரகாசவித்தியாலயம், கரவெட்டி மணிவாசகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும்,

தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த அல்வாய் சண்முக வித்தியாலயம் , குடமியன் ஜி.ரி.எம்.எஸ். ,நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயமும் , தீவக வலயத்தை சேர்ந்த வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம் ,காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயம், வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும் வழங்கப்படவுள்ளது. (4-5)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை நிற்சாமம் அருள்மிகு ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறமும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (5-4)

## வில்லூன்றி விநாயகர் மஹோற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நர்ளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை நடைபெறும்.

எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர் திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (5-4)

## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட கொத்தணிகளுக்கான நெல்சிப் கலந்துரையாடல்

வடக்கு –கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் (நெல்சிப்) கீழ் மக்கள் பங்கு பற்றலுடன் அபிவிருத்தித் திட்டங்களை இனம் காண்பதற்கும் முன்னுரிமைப் பட்டியலை தயாரிப்பதற்கும் வசதியாக கொத்தணி ரீதியாக கலந்துரையாடல் வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இதில் நீர்வேலி கொத்தணிக்குட்பட்ட ஜே/268,ஜே/269,ஜே/270,ஜே/271, ஜே272, ஜே/273 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச்சேர்ந்தோருக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும்,

அச்சுவேலி கொத்தணிக்குட்பட்ட ஜே/281, ஜே/282, ஜே/283, ஜே/284, ஜே/285, ஜே/286,ஜே/287 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியிலும்,

புத்தூர் கொத்தணிக்குட்பட்ட ஜே/273, ஜே/274,ஜே/275,ஜே/276,ஜே/277,ஜே/278, ஜே/280 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும்,

உரும்பிராய் கொத்தணிக்குட்பட்ட ஜே/263, ஜே/264, ஜே/265, ஜே266, ஜே/267 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும்,

கோப்பாய் கொத்தணிக்குட்பட்ட ஜே/257, ஜே/258, ஜே/259, ஜே/260, ஜே/261, ஜே/262 ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு கோப்பாய் நாவலர் தமிழ் கலவன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

மேற்படி கொத்தணிகளுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளின் கீழ் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், பாடசாலை பிரதிநிதிகள், சமூக சேவையாளர்கள், கல்வியாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோரை குறித்த கலந்துரையாடலில் கலந்து பிரதேச திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்து ஒத்துழைக்குமாறு வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். (5-4)

## அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய பொது அறிவுப் போட்டி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான இந்து சமய பொதுஅறிவுப் போட்டிப்பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.


இது தொடர்பில் இந்து கலாசார அலுவலக உதவிப்பணிப்பாளர் திருமதி கேமலோஜினி குமரன் அறிவித்துள்ளதாவது, இதில் தரம் 2 ,3, 4 இற்கு காலை 9 மணி முதல் 10 மணிவரையும் 5, 6, 7 இற்கு காலை 10.30 மணி முதல் 11.30 மணிவரையும் 8, 9,10 ,11 இற்கு காலை 12 மணி முதல் 1 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இம்மாணவர்களுக்கான சுட்டிலக்கம், பரீட்சை மண்டபம் ,நேரசூசி தொடர்பான விபரங்கள் அந்தந்த அறநெறிப் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் விகிதாசார அடிப்படையிலே அவர்களது அறநெறிப்பாடசாலைக்கான உதவிகள் வழங்கப்படும் எனவும் இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களையும் பரீட்சைக்கு தோற்றுமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி. கேமலோஜினி குமரன் அறிவித்துள்ளார். (5-4)

# கௌதமாலாவில் "அகதா" சூறாவளி; மண்சரிவில் அகப்பட்டு 96 பேர் பலி

## 80 ஆயிரம் பேர் வரை பாதிப்பு



(கவுதமாலா)

மத்திய அமெரிக்காவில் வீசிய அகதா சூறாவளியால் கடும் மழை பெய்துள்ளது. இதில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 96 பேர் பலியாயினர். 24 பேர் காணாமல் போய் விட்டனர்.மேலும் பலர் நிலச்சரிவில் சிக்கி இருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மெக்சிகோவின் அருகிலுள்ள மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உருவான *அகதா* சூறாவளி கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மலைப்பாங்கான அந்நாட்டில் இச் சூறாவளி பலத்த மழையை உருவாக்கியுள்ளது. 3 அடிக்கும் (ஒரு மீற்றர்) அதிக மான அளவில் மழை பெய்துள்ளதாக அந்நாட்டு அதிபர் அல்வரோ கொலோம் தெரிவித்துள்ளார்.

இம்மழையால் பல பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி 96 பேர் பலியாகி விட்டதாக உறுதிப்படுத்தப் பட்டுள் ளது. மேலும் 24 பேர் காணாமல் போய்விட்டனர். நாடு முழுவதும் இச்சூறாவளி மற்றும் மழையால் 80 ஆயிரம் பேர் தங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறியுள்ள னர்.

தலைநகர் கவுதமாலாவிலிருந்து 160 கி.லோ.மீற்றர் தொலைவிலுள்ள சான் அன்டோனியா நகரில் நடந்த மிகப் பெரிய நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. இந்நிலச் சரிவில் வீடுகள் மரங்கள் என எல்லாம் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

சூறாவளி ஒரு இரவில் மட்டும் தாக்கியிருப்பதாலும் இன்னும் சில நாட்களுக்குப் பலத்த மழை இருக்கக் கூடும் என்று அந்நாட்டு வானிலை நிலையம் எச்சரித்துள்ளது. நாட்டில் ஓடும் பல ஆறுகளில் வெள்ளம் பெருகியுள்ளதால் கரைகள் உடைந்து வெள்ளம் நகருக்குள் பாய்ந்து வீடுகளை மூழ்கடித்து வருகிறது.

அண்டை நாடான எல்சல்வடாரில் இந்த சூறாவளி மழைக்கு இதுவரை ஒன்பது பேர் பலியாகியுள்ளனர். கவுதமாலா எல்சல்வடார் நாடுகளின் முக்கிய விளைபொருளான கோப்பித் தோட்டங்கள் இம்மழையால் பெருமளவில் சேதமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (5-4)

# அந்தமானில் நிலநடுக்கம்; சிறிய அளவில் சுனாமி?

அந்தமான் தீவுகளை நேற்றுக் காலை நில நடுக்கம்தாக்கியுள்ளது. 6.4 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று ஹவாய் தீவில் உள்ள அமெரிக்கப் புவியியல் நிலையம் அறிவித்துள்ளது.

வங்கக் கடலில் போர்ட்பிளேருக்கு 120 கிலோ மீற்றர் தூரத்திலும் கடலுக்கடியில் 127 கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மிகச்சிறிய அளவில் சுனாமி அலைகள் ஏற்படலாம் என்றும் அவை அந்தப் பகுதியில் மட்டுமே தோன்றும் என்றும் இதனால் பெரிய அலைகள் ஏதும் உருவாகாது என்றும் மேற்படி புவியியல் மையம் அறிவித்துள்ளது. (5-4)

# உலகில் அமைதியான மனிதர்கள் பட்டியலில் இளவரசர் ஹரி முதலிடம்

(லண்டன்)

உலகின் முதல் 50 அமைதியான மனிதர்கள் பட்டியலில் இங்கிலாந்து இளவரசர் ஹரி முதலிடம் பிடித்துள்ளார். முதலிடத்தில் இருந்த ராபர்ட் பட்டின்சன் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

சர்வதேச அளவில் விளையாட்டு, சினிமா, இசை ,அரசியல் ஆகிய துறைகளில் பிரபலமாக உள்ள நபர்களில் சமுதாயத்தில் சகிப்புத்தன்மையுடனும், பிறர் மீது கோபப்படாமலும், அன்புடன் பழகும் 50 நபர்களை ஜி.க்யூ.இதழ் பட்டயலிட்டுள்ளது.

இதில் இங்கிலாந்து இளவரசர் ஹரி முதலிடத்தில் உள்ளார். இராணுவத்தில் பயிற்சி பெற்ற இவர் ஆப்கானில் பணியாற்றியதன் மூலம் இவரது மதிப்பு உயர்ந்தது.

இதுதவிர, விளம்பர தூதராகவும், போலோ விளையாட்டு வீரராகவும் இவர் உள்ளார். இவரது மூத்த சகோதரர் இளவரவர் வில்லியம் பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை.

இப்பட்டியலில், ராபர்ட் பட்டின்சன் 2 ஆம் இடத்தைப் பிடித்துள்ளார். இவர் கடந்த ஆண்டின் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார்.



ரெஜ்ஜி லவ் என்பவர் மூன்றாம் இடத்தில்உள்ளார். இவர் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் உதவியாளராக உள்ளார். டிஸிராஸ்கல் (4) , நடிகர் ஜேசன் ஸ்க்வார்ட்ஸ் மேன் (5), உசைன் போல்ட் (6) , புகைப் படக்கலைஞர் ரயான் மெக்கின்ஸி (7), திரைக் கதை எழுத்தாளர் டஸ்டின் லான்ஸ் பிளாக் (8) , மேட் ஹெல்டர்ஸ் (9), எழுத்தாளர் வெல்டவர் (10) ஆகியோர் முதல் 10 இடங்களைப் பிடித்த மற்றவர்கள். (5-4)

# காஸா உதவிக் கப்பல்கள் மீது இஸ்ரேல் திடீர் தாக்குதல்

## 15 துருக்கியர்கள்பலி

காஸாவுக்கு உதவிப் பொருட்களை ஏற்றிச் சென்ற துருக்கி நாட்டு உதவிக் கப்பல்கள் மீது இஸ்ரேலிய கமாண்டோப் படையினர் நடத்திய தாக்குதலில் 15 பேர் பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல்வேறு உலக நாடுகளும் இஸ்ரேலுக்கு தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

பாலஸ்தீனத்தில் உள்ள காஸா பகுதிக்கு துருக்கியை சேர்ந்த 6 கப்பல்களில் உதவி பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டன. இந் நிலையில் அந்த கப்பல்களில் சுமார் 600 பேர் வரையில் பயணித்துள்ளனர். இந் நிலையிலேயே இஸ்ரேலின் கப்பற்படை கமாண்டோ பிரிவினர் அக் கப்பல்கள் மீது அதிரடி தாக்குதல்கள் நடத் தியுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தை அடுத்து இஸ் ரேலுக்கு கண்டனத்தை தெரிவித்த துருக்கி, இஸ்ரேலுக்கான தனது தூதரையும் உடனடியாக திரும்பப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5-4)




# புதிய குடியுரிமை விதிகள் ஆஸி. செயலுக்கு எதிர்ப்பு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவின் புதிய குடியுரிமை விதிகளை எதிர்த்து வெளிநாட்டு மாணவர்கள் கண்டனப் பேரணி நடத்த முடிவு செய்துள்ளனர். அமெரிக்கா மற்றும் பிரிட்டனுக்கு இணையாக அவுஸ்திரேலிய கல்வி நிறுவனங்களில் படிக்க வெளிநாட்டு மாணவர்கள் விரும்புகின்றனர்.

சமீபகலமாக இந்திய மாணவர்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது இதையடுத்து சமீபத்தில் அவுஸ்திரேலிய அரசு புதிய விசா விதிமுறைகளை அறிவித்தது. மருத்துவம், பொறியியல் பணிகளுக்கான படிப்பு படித்தவர்களுக்கு கெடுபிடிகள் ஏதும் இல்லை அழகுகலை, சமையல்கலை போன்ற படிப்பு படித்தவர்களுக்கு இங்கேயே தங்கி வேலை செய்ய விசா வழங்க முடியாது என அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த படிப்புகளை படித்தவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் அரசின் இந்த திடீர் அறிவிப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது, ஏற்கனவே இந்தப் படிப்பை படித்தவர்களுக்கும், படிப்பவர்களுக்கும் புதிய விசா கொள்கையில் சலுகை காட்ட வேண்டும் என மாணவர்கள் கோரியுள்ளனர். இந்த கோரிக்கையை வற்புறுத்தி இந்த வாரத்தில் அவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளனர். (5-4)

# தீவிரவாதிகளின் நடமாட்டம் வெளிநாடுகளில் அதிகரிப்பு; பாகிஸ்தானுக்கு புதிய நிபந்தனை விதித்தது அமெரிக்கா

(நியூயோர்க்)

அமெரிக்காவுக்கு பயணம் செய்வோர் மட்டுமன்றி , ஏனைய நாடுகளுக்குச் செல்லும் பாகிஸ்தானியர் பற்றிய முழு விபரங்களையும் தரும்படி, பாகிஸ்தானுக்கு அமெரிக்கா புது நிபந்தனை விதித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாகிஸ்தானில் இருந்து அடிக்கடி போலி பெயர்களில் அல்கொய்தா, தலிபான் தீவிரவாதிகள், வெளிநாடுகளுக்கு பயணிக்கின்றனர். அவர்களுக்கு பாகிஸ்தானில் இருந்து தான் பணம் வழங்கப்படுகிறது. ஆயுதப் பயிற்சியும் தரப்படுகிறது.

சில நாடுகளில் அவர்கள் பதுங்கி, அங்கிருந்து இந்தியா, அமெரிக்காவில் சதித்திட்டங்களை நிறைவேற்ற திட்டமிடுகின்றனர்.

ஆனால் இவை வெளியே தெரியாத அளவுக்கு நடந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தான் மீது அமெரிக்காவுக்கு சந்தேகம் இருந்தாலும் சமீப காலமாக அதிக அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதி டைம் சதுக்க கட்டடங்களை குண்டு வைத்து தகர்க்கும் சதி திட்டத்தை முறியடித்து, பாகிஸ்தான் தீவிரவாதி பைசல் ஷாசத்தை கைது செய்து அமெரிக்கப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

அப்பாவி போல இவர் பாகிஸ்தானில் இருந்து பயணம் செய்துள்ளது தெரியவந்துள்ளது. இதைத் தொடர்ந்து தான், பாகிஸ்தானில் இருந்து பயணம் செய்யும் பாகிஸ்தானியர் பற்றிய பெயர் விபரத்தை அமெரிக்க புலனாய்வுத்துறை பட்டியலிட்டு ஆராய ஆரம்பித்தது.

அமெரிக்கா சமீபத்தில் இன்னொரு கிடுக்கிப்பிடியை பாகிஸ்தான் அரசுக்குப் போட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து அமெரிக்கா வரும் பாகிஸ்தானியர் பெயர் மட்டுமின்றி, வேறு நாடுகளுக்குச் செல்லும் பாகிஸ்தானியர் பெயர் விபரம் அளிக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது.

எந்த நாட்டில் பாகிஸ்தானியர் வந்திறங்கினாலும் அவர்கள் பற்றிய விபரத்தை தரும்படி இந்தியா உட்பட பல நாடுகளுடன் அமெரிக்கா ஒப்பந்தம் செய்துள்ளது.

பாகிஸ்தானைப் பெறுத்த வரை ஒரு படி மேலே போய், பயணிகளின் விபரங்கள் மட்டுமன்றி, அவர்கள் பயணக்கட்டணத்தை எப்படி செலுத்தினர் என்ற விபரத்தை தர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

பாகிஸ்தானியரின் பயணம் தொடர்பான முன்னைய விபரங்களையும் தர வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது. அப்படித் தந்தால், பாகிஸ்தானில் இருந்துதான் தீவிரவாதிகள் செல்கின்றனர், அவர்களுக்கு பாகிஸ்தானில் இருந்து தான் பணம் செல்கிறது,வேறு சில காரணங்களுக்கும் பணப் பரிமாற்றம் நடக்கிறது என்பது நிரூபணமாகிவிடும்.

ஆனால் அமெரிக்காவின் புலனாய்வுத் துறை, எல்லை பாதுகாப்புத்துறை, தேசிய பாதுகாப்புதுறை உயர் அதிகாரிகளை அழைத்துப் பேசிய அதிபர் ஒபாமா, பாகிஸ் தானில் இருந்து தான் தீவிரவாதிகள் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர் என்று நிரூபணமானால் கடும் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கும் படி உத்தரவிட்டுள்ளார்.

இதனால் பாகிஸ்தானிடம் அமெரிக்க அதிகாரிகள் கண்டிப்புடன் பேச்சு நடத்தியுள்ளனர். பாகிஸ்தானில் இருந்து அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணிப்பவர்களின் பயண விபரங்கள், அவர்கள் பணப்பரிமாற்றம் போன்ற விபரங்கள் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என பாகிஸ்தான் அச்சமடைந்துள்ளது.(5-4)

## யாழ்;அம்பாந்தோட்டையில் இந்திய அலுவலகங்கள்

வடக்கு மற்றும் தெற்கில் புதிதாக இரண்டு இந்திய பிரதி உயர் ஸ்தானிகராலயங்களை ஸ்தாபிப்பது தொடர்பாக இரு நாடுகளினதும் உயர்மட்டக்குழுக்கள் ஆராய்ந்து வருவதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டையில் இந்தியபிரதி உயர்ஸ்தானிகராலயங்களை ஸ்தாபிப்பது தொடர்பாக ஆராயப்பட்டுவருகிறது.

கண்டியில் தற்போது இயங்கி வரும் இந்திய பிரதி உயர்ஸ்தானிகராலயத்துக்கு மேலதிகமாகவே யாழ்ப்பாணத்திலும் அம்பாந்தோட்டையிலும் இவற்றை நிறுவுவது தொடர்பாக இரு நாடுகளிடையிலும் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாக வெளி விவகார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (5-4)

# வடக்கு- கிழக்கிற்கு சுய ஆட்சி வழங்கினால் இனங்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கும்

## ஹெல உறுமய கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கூடுதலான அதிகாரங்களோ வடக்கு மற்றும் கிழக்கிற்கு சுயஆட்சியோ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு போதும் தீர்வாக அமையாது.மாறாக மீண்டும் இனங்களுக்கு இடையில் மோதல்களையே உருவாக்கும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் உட்பட ஏனைய பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வை வழங்க அரசாங்கம் காலம் கடத்தக் கூடாது அதேபோன்று அரசியல் தலைமைத்துவங்கள் பேதங்களை மறந்து நியாயமான தீர்வுகளுக்காக அரசாங்கதிற்கு ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளதாவது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசியல் நோக்கத்துடன் எதிர்க்கட்சிகள் கையாள்வதனாலேயே தற்போது தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின்றது. வடக்கில் மீள்குடியேற்றப் பணிகள் காலதாமதமாவதற்கு அப்பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளே காரணம்.

ஆனால் எதிர்க்கட்சிகள் தவறான கருத்துக்களை உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பரப்புவதனால் வடக்கில் மீள்குடியேற்றம் உட்பட ஏனைய அபிவிருத்திப் பணிகளும் தாமதமாகின்றது.

எவ்வாறாயினும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இனங்களுக்கு இடையே ஒற்றுமை வளர்ந்து கொண்டு வருகின்றது. எனவே கடுமையாக பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

அதனால் அம்மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வு கூடிய விரைவில் வழங்கப்பட வேண்டும். இது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பும் கடமையுமாகும். எனக் கூறினார். (4-5)

## ஐ.நா. அமைக்கும் நிபுணர்கள் குழுவுக்கு ஐ.தே.மு.எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஆலோசனை பெறுவதற்கு நிபுணர்கள் குழு ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் அமைக்கப்படுவதை பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசிய முன்னணி எதிர்க்கின்றது என முன்னணியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஆனால் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் ஏன் இவ்வாறானதொரு நிபுணர்கள் குழுவை நியமிக்கும் முயற்சிக்கு சென்றார் என்பது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணி அவதானம் செலுத்தியுள்ளது என்றும் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஆலோசனை பெறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நடவடிக்கை எடுத்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஐக்கிய நாடுகள் சபை எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை அரசியற் கட்சி என்ற ரீதியில் ஐக்கிய தேசிய முன்னணி எதிர்க்கின்றது. ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் இவ்வாறு நிபுணர்கள் குழு ஒன்றை நியமிப்பதற்கான காரணம் என்ன? என்பதலை நாம் ஆராய வேண்டும்.

அதாவது இலங்கை விவகாரம் தொடர்பில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு சிறந்த முறையில் விளக்கம் அளிக்கவில்லையா? அந்த விடயத்தில் அரசாங்கம் பலவீனமாக இருந்துள்ளதா? என்று பார்க்க வேண்டும். எனவே பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சியை நாங்கள் எதிர்க்கின்றோம்.

ஆனால் அரசாங் கம் இந்த விடயத்தில் என்ன செய்கின்றது என்றே வினவுகின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிக்கு ஆரம்பத்திலிருந்து அரசாங்கம் எதிர்ப்பு வெளியிட்டு வந்தபோதிலும் அந்த விடயம் கைவிடப்படவில்லை.

ஆனால் இவ்வாறு உள்விவகாரங்களில் தலையிட இடமளிக்க முடியாது. அரசாங்கம் இந்த விடயத்தில் முறையாக செயற்பட வேண்டும். (4-5)

# அரசியல் சாசன திருத்தம் தொடர்பில் சு.கட்சி மத்திய குழுவிடம் ஆலோசனை


## ஜனாதிபதி திட்டம்

(கொழும்பு)

அரசியல் சாசன திருத்தங்கள் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவிடம் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இந்தியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை எதிர்வரும் 8 ஆம் திகதி மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்திற்கு முன்னதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மத்திய செயற்குழுவுடன் ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.



தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார செயலாளர் றொமேஷ் ஜயசிங்க ஆகியோர் ஜனாதிபதியுடன் இந்திய விஜயத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி உள்ளிட்ட பல முக்கிய தலைவர்களை ஜனாதிபதி மகிந்தராஜபக்சவை சந்திக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-4)

# மாகாண மட்ட தமிழ்த்தின போட்டி முடிபுகள்

நேற்றைய தொடர்ச்சி....

**இசையும் அசைவும் - பிரிவு-1**

ஜோ.லஜனிகா (வ/விபுலானந்தாக் கல்லூரி), இ.கிலானி( மன்/கட்டையம்பன் றோ.க.த.க.பாடசாலை), ம.ரம்மியா(ஸ்கந்த வரோதயாக் கல்லூரி).,

**இசை -தனி - பிரிவு2**

வி.வத்சாங்கிதசர்மா (இந்துக் கல்லூரி), ஜீ.ஜெதுசன்(வ/தமிழ் மத்திய மகா வித்தி, பீ.மேரிடி லக்சினி (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),

**பிரிவு 3**

ந.சிபிஷா(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி.), தி.வருணியா(யா/இந்து மகளிர் கல்லூரி), அ.ஆன்.அஜந்திக்கா(மன்/புனித ஆனாள் ம.ம.வித்தி.),

**பிரிவு 4**

அ.சண்முகப்பிரியன்(யா/யூனியன் கல்லூரி), ஜெ.ஜல்சி லெம்பேட்(மன்/புனித ஆனாள் ம.ம.வித்தி),கே.ஜீவலதா (வ/புதுக்குளம்ம.வித்தி),

**பிரிவு 5**

க.வர்ஜீகன்(யா/செங்குந்தா இந்துக் கல்லூரி), இ.அனுஷா(வ/பெரியகோமரசன் குளம் ம.வித்தி), தாவீது நிர்மலகென்றீசன் (கிளி/ முழங்காவில் மகா வித்தி.)

**இசை-குழு-1**

வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணக்கல்லூரி, மன்/புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம்.

**குழு-11**

யா/இந்து மகளிர் கல்லூரி, மன்/புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம்,வ/கல்மடு மகா வித்தியாலயம்.

**நடனம் -குழு-1**

யாழ். மத்திய கல்லூரி,வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்,கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்.

**நடனம்- குழு-2**

ஈ.வித்தகி(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஸ்ரீ.வித்தகி(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ம.மிலானி கிறிசாந்தி( மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

**குழு-3**

சி.பாவனா ( யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), வ.கம்சினி(வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), அ.ரினோஜா (மு/உடையார்கட்டு மத்திய மகா வித்தியாலயம்).

**குழு-4**

க.அபிநயா( யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பு.ஜனந்தன்( வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), கை.துளசிகா(மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).

**குழு-5**

ச.லாவண்யா(யா/விக்ரோறியாக் கல்லூரி), ம.அமிர்தவர்ஷினி( வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), டி.திவிசா நிவேதனா (மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

**திறந்த போட்டி**

**நாட்டியநாடகம் (ஆடல் கதை)**

யாழ். மத்திய கல்லூரி, வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்,மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி.

**நாட்டார் பாடல்**

யா/ஹாட்லிக் கல்லூரி, கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரி, மன்/முருங்கன் ம.வி,

**வில்லுப்பாட்டு**

யா/சென் ஜோன்ஸ் கல்லூரி, வ/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம், மன்/ ஆண்டாங்குளம் றோ.க.த.க. பாடசாலை,

**விவாதம்**

யா/யாழ்.இந்துக் கல்லூரி, வ/ தமிழ் மத்திய மகா வித்தி, கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி,

**தமிழறிவு வினாவிடை**

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, , மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, வ/பெரிய கோமரசன்குளம் மகா வித்தி,

**முஸ்லிம் நிகழ்ச்சி**

மன்/புதுக்குடியிருப்பு அ.மு.க.பா., வ/மதீனா ம.வி, யா/ஒஸ்மானியாக் கல்லூரி,

**வடமோடிக் கூத்து**

கைதடி நாவற்குழி அ.த.க.பா., வ/புதுக்குளம் மகா வித்தி, மன்/முருங்கன் ம.வி,

**தென்மோடிக் கூத்து**

கொக்குவில் இந்துக் கல்லூரி, வ/புதுக்குளம் மகா வித்தி,

**சிந்துநடைக் கூத்து**

வ/கல்மடு மகா வித்தி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மன் / மடுக்கரை அ.த.க.பாடசாலை,

**விசேட கூத்து**

புனித ஹென்றியரசர் கல்லூரி, கிளி/கனகபுரம் மகா வித்தி., வ/ முஸ்லிம் மகா வித்தி,

**இசை நாடகம்**

யா/புனித அந்தோணியார் கல்லூரி, மன்/ஆண்டாங்குளம் றோக.த.க.பா., வ/சுந் தரபுரம் சரஸ்வதி வித்தி. (4)

## புதிய அரசியல்கட்சிகளை பதிவு செய்யும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. இப்பணிகள் இம்மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேர்தல் செயலகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இதுவரை அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படாத கட்சிகளை 1981 ஆம் ஆண்டின் முதலாம் ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் படி பதிவு செய்து கொள்ள முடியும்.

இக்காலப் பகுதியில் அதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்காக ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதிய கட்சிகளைப் பதிவு செய்வதற்கான பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவங்கள் கட்சி செயலாளரினால் கையொப்பம் இடப்பட்டு தேர்தல்கள் செயலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இல்லையேல் ஜுன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப் பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணபத்துடன் கட்சியின் யாப்பு, செயற்குழு உறுப்பினர்களின் விபரங்கள் அதில் பெண்ணொருவரும் கட்டாயமாக உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அது மட்டுமன்றி கட்சியின் கொள்கை தொடர்பிலும் தெளிவுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4)

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE
# கொழும்பு வணிகவள நிலையம்

## முன்னோடிப் பரீட்சை க.பொ.த.உயர் தரம்-2010

வணிகக்கல்வி - II பகுதி - I நேரம் : 1 மணி

♦1 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்கும் போது மிகப் பொருத்த மான விடையினைத் தெரிவு செய்க.

(1)முயற்சியாண்மை அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணி தொடர்பாகத் தவறானது எது?
(1) முன்மாதிரி நபர்கள் (2) பெற்றோர்
(3) குடும்பப் பொறுப்புக்கள் (4) வேலை இழப்பு
(5) வலையமைப்பு

(2)முயற்சியாளர் வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்காக வினைத்திறனுடனும் ஈடுபாட்டுடனும் செயற்படக்கூடியதன்மையினை வெளிப்படுத்துவது
(1) நல்லெண்ணமுடையவர் (Optimisitic)
(2) தூரநோக்குடையவர் (Visionary)
(3) ஊக்கமாகச் செயற்படல் (Motivated)
(4) திடசங்கற்பம் (self cofident)
(5) முன்னுணர்வு (Perceptive)

(3)வணிக அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதி, நிதிவசதி, ஊழியர் பயிற்சி என்பவற்றை வழங்குவதனை நோக்கமாகக் கொண்ட நிறுவனம் எது?
(1) லங்கா புத்திர அபிவிருத்தி
(2) இலங்கை வங்கியின் முயற்சியாண்மை அபிவிருத்தி ஆலோசனை மையம்
(3) தேசிய முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை
(4) கைத்தொழில் தொழில் நுணுக்க நிறுவனம்
(5) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை.

(4)சுசகன (Susahana) கடன்திட்டத்தைத் தொழிற்படுத்தி வருவது எது?
(1) மக்கள் வங்கி (2) தேசிய அபிவிருத்தி வங்கி
(3) இலங்கை மத்திய வங்கி (4) சனச வங்கி
(5) தேசிய சேமிப்பு வங்கி

(5)திணைக்களமாக்கலின் (Departmentalization) ஓர் அடிப்படை பின்வருவனவற்றுள் எது?
(1) உற்பத்தித் திரவியங்கள்
(2) வாடிக்கையாளர்கள்
(3) விற்பனைகள்
(4) இலாபங்கள்
(5) முகாமைத்துவமட்டம்

(6)பின்வருவன திறன்களும், பண்புகளும் ஆகும். இதில் முயற்சியாண்மை சார் பண்பினை இனங்காண்க.
(1) பகுப்பாய்வு (2) கணிப்பு
(3) தொடர்பாடல் (4) நுண்ணறிவு
(5) ஆலோசனை

(7)ஒரு சமூகத்தினதும் தனி நபரதும் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துதல்.
(1) ஒழுங்கமைத்தல் (2) அதிகாரக் கையளிப்பு
(3) செயலூக்கமளித்தல் (4) தலைமைத்துவம்
(5) விசால அளவு

(8)பின்வருவனவற்றுள் தரக்கட்டுப்பாட்டு முறை அல்லாதது?
(1) தரவட்டம் (2) மொத்தத்தரமுகாமை
(3) குறித்த நேர உற்பத்தி (4) செயன்முறை (Kaizen)
(5) கணனி நிகழ்ச்சித் திட்டம்

(9)ஒரு நிறுவனத்தின் செயல் ஒப்படையும் அவற்றை அடைவதற்கான வளத்திரட்சியையும் மேற்கொள்ள வேண்டியவற்றையும் வெளிப்படுத்துவது.
(1) விதிகளும் பிரமாணங்களும் (Rules & Regulation)
(2) நிகழ்ச்சித்திட்டம் (Programmes)
(3) தந்திரோபாயம் (Strategies)
(4) செயற்பாட்டு நடைமுறைகள் (Procedures)
(5) இலட்சிய நோக்கம் (Mission)

(10)பின்வருவனவற்றுள் மேம்படுத்தற் கலப்பில் உள்ளடங்குவது
(1) விலை (2) விற்பனை ஊழியர்
(3) செயற்பாடுகள் (4) நிகழ்வுகளும் அனுபவங்களும்
(5) பௌதிகச் சூழல்

(11)உற்பத்தி நிறுவனங்கள் தமது களஞ்சியப்படுத்தற் கிரயத்தைக் குறைப்பதற்கும் பயன்படுத்தப்படும் இருப்புக் கட்டுப்பாட்டு முறை எது?
(1) சமப்பாட்டுப் புள்ளி பகுப்பாய்வு
(2) ABC பகுப்பாய்வு
(3) JIT முறைமை
(4) தரக்கட்டுப்பாடு
(5) இரு கொள்கலமுறைமை

(12)சிறிய அளவில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களால் பெரும்பாலும் கையாளப்படும் தள அமைப்பு முறைமை எது?
(1) செயற்பாட்டு முறைமை
(2) உற்பத்தி முறைமை
(3) சிறிய அளவு முறைமை
(4) நிலையான அமைப்பு முறைமை
(5) மேற்கூறிய அனைத்தும்

(13) செயல் முகாமையின் கருமம் ஒன்று அல்லாதது?
(1) உற்பத்தி வடிவமைப்பு (2) பொருள் கொள்வனவு
(3) உற்பத்தி பொறியியல் (4) தரக்கட்டுப்பாடு
(5) உற்பத்திக் கலப்பு

(14)பின்வருவன முகாமையாளர் ஒருவரின் கடமைப் பங்குகளாகும். இதில் தகவல் தொடர்பான கடமைப் பங்கினை இனங்காண்க.
(1) முயற்சியாண்மையாளராக செயற்படல்
(2) வளப்பங்கீட்டாளராக செயற்படல்
(3) பேரம் பேசுதல்
(4) முன்னோடியாக செயற்படல்
(5) இணைப்பு அதிகாரியாக செயற்படல்

(15) பின்வருவனவற்றுள் எது விலையிடல் நோக்கங்களுள் தவறானது?
(1) கேள்வியினை உறுதி செய்தல்
(2) நடைமுறை இலாபத்தை உச்சப்படுத்தல்
(3) உற்பத்திப் பங்கை உச்சப்படுத்தல்
(4) சந்தைப்பங்கை உச்சப்படுத்தல்
(5) சந்தை சாரம் உறிஞ்சும் விலையிடல்

(16)உற்பத்திப் பொறியியல் கருமம் அல்லாதது?
(1) உற்பத்தி ஆய்வு முறைகளை வடிவமைத்தல்
(2) ஆய்வுமுறைக்கான இயந்திர உபகரண வீச்சினைத் தெரிவு செய்தல்
(3) ஆய்வுப்பாட்டிற்கான நேர அட்டவணையை தயாரித்தல்
(4) ஆய்வுப்பாட்டுக்கு தேவையான மூலப்பொருட்களை தீர்மானித்தல்
(5) சமன்பாட்டுப் புள்ளியை தீர்மானித்தல்

(17) பின்வரும் நிதியளிப்பு மூலகங்களுள் கம்பனி ஒன்றின் முகாமைத்துவக் கட்டுப்பாட்டிற்கு சவாலாக இருக்கக் கூடியது.
(1) தொகுதி கடன் வழங்கல்
(2) முன்னுரிமைப் பங்கு வழங்கல்
(3) சாதாரண பங்கு வழங்கல்
(4) வணிகத்தாள்களை வழங்குதல
(5) கடன் காரணிப்படுத்தல்

(18)பின்வருவனவற்றுள் ஊழியர் நலன் ஒன்றாக அமையாதது
(1) விடுமுறை நன்மைகள் (2) வைத்திய வசதிகள்
(3) வீடமைப்பு வசதிகள்
(4) மேலதிக நேர கொடுப்பனவுகள் (5) பொழுது போக்கு வசதிகள்

(19) தொழிலின் எதிர்கால தேவைக்காக ஊழியர்களின் முகாமைத் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுதல்
(1) பயிற்சியளித்தல் (2) அபிவிருத்தி
(3) தொழில் ஐக்கியப்படுத்தல் (4) செயற்திறன் மதிப்பீடு
(5) ஊழியம் மாற்றம்

(20)வெளிவாரியாக ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளலின் ஓர் அனுகூலம் பின்வருவனவற்றுள் எது?
(1) அபேட்சகரின் பலங்களையும் பலவீனங்களையும் அறிந்து கொள்ளலாம்.
(2) நிறுவகத்தின் வேலைகள் விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சயமாக இருக்கும்.
(3) புதிய கருத்துக்களிலிருந்து அது நன்மையடையும்.
(4) அது ஊழியர்களின் ஒழுங்குணர்வுக்கு நன்மை பயக்கும்
(5) அது விரைவானதும் மலிவானதுமான முறையாகும்.

♦21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்புக.

(21) பிரச்சினைகள் என்பது வாய்ப்பாகும் தீர்வு ஆனது .......................... ஆகும்.

(22) முகாமையாளருக்கு சட்ட ரீதியான அதிகாரத்தை வழங்குவது ............................ எனப்படும்.

(23)பெற்றோல் ட்றக்கர் (Peter Drucker) என்பவரின் கருத்துக்கு அமைய கருமங களைச் சரியாகச் செய்தல் (Doing things right) ............................ என அழைக்கப்படும்.

(24)நெறிப்படுத்தலானது ..............................., ..............................., .................... எனும் தொழிற்பாடுகளை உள்ளடக்கியது.

(25)உற்பத்திகளின் தரமேம்பாடு பற்றிக் கருத்திற் கொள்ளும் போது அவசியமாகக் காணப்படும் முகாமைத்துவ முறைமை ............................ ஆகும்.

(26)வாடிக்கையாளர் தேவையடிப்படையில் அமையும் உற்பத்தி முறைமை............................ ஆகும்.

(27)விளம்பரப்படுத்தல் ......................, ...................... , ...................... எனும் நோக்கத்தைக் கொண்டிருக்கும்.

(28)உற்பத்தி கலவைகளில் உள்ளடங்கும் உற்பத்தி வகைகளின் எண்ணிக்கை ............................ ஆகும்.

(29) நிறுத்தி வைத்த இலாபம், பெறுமானத் தேய்வு, ஒதுக்கம் என்பவற்றினைப் பேணும் போது நிறுவனத்திற்கான மிகப்பிரதான தேவை ............................ ஆகும்.

(30)............................ மூலம் ஊழியர்கள் வேலைச் சூழலுக்குப் பொருத்தமாக்கப படுகின்றது

**♦31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

(31) சிறிய முயற்சியாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு உரு வாக்கப்படும் வங்கி எது?

(32)அதிகாரக்கையளிப்பு மேற்கொள்ளப்படும் கருமங்கள் மூன்று யாவை?

(33)சிக்கனக் கட்டளைத் தொகை மாதிரியுரு (EOQ) என்ன வகையான பண்டங்களுக்குப் பொருத்தமானது.

(34)இயந்திரமயமாதலின் வகைகள் மூன்றும் எவை?

(35)கம்பனி ஒன்று தனது சக உற்பத்திப் பொருட்களுக்கும் ஒரு பண்டப் பெயரைப் பயன் படுத்துகிறது. அது எந்தவகையான பண்டக் குறியாகும்.

(36)விநியோக நடுவர்கள் ஆற்றும் தகவல், சேவைகள் யாவை?

(37)முழுமைப் படைப்பு எண்ணக்கருவில் கவனஞ் செலுத்தப்படும் அடிப்படையான அம்சங்கள் யாவை?

(38)வணிக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் கரைகடந்த வங்கிச் செயற்பாட்டு பகுதியை எவ்வாறு அழைப்பர்?

(39)வேலை உருவாக்கத்தின் அடிப்படைகள் இரண்டும் எவை?

(40)வேலைச் சுழற்சியானது எவ்வகையான பயிற்சிமுறைமையாகும்.

---

## 31.05.2010 அன்று வெளியான வணிகக்கல்வி பகுதி I– 1,2 இற்கான விடைகள்

### பகுதி – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 1 | (2) | 1 | (3) | 3 | (4) | 3 | (5) | 2 |
| (6) | 3 | (7) | 3 | (8) | 3 | (9) | 2 | (10) | 2 |
| (11) | 1 | (12) | 2 | (13) | 2 | (14) | 2 | (15) | 5 |
| (16) | 2 | (17) | 2 | (18) | 4 | (19) | 5 | (20) | 5 |

(21)வர்த்தகம் (22) மறுகாப்புறுதி (23)நுண்ணறிவுச் சொத்துக்கள் (24)கியோட்டா உண்டியல் (25)உடைமையாக்கல் (26) வரையுனரை நாடுக. (27)களஞ்சிய ஆணைப்பத்திரம் (28) நாணயக்கடிதம் (29) வன்பொருட்கள் (30)ISP இணையச் சேவை வழங்குனர் (31) நுண்ணறிவு அனுமதிப்பத்திரம் (32) உடைமையாக்கல், ஒன்றிணைதல் (33) சூரிய சிங்கமுக சின்னம் (34) மீள்பயன்பாடு, மீள்உற்பத்தி (35) ஆயுட்காப்புறுதி, சுகாதாரக் காப்புறுதி

(36)Pass word (இரகசிய குறியீடு) (37) EFTA (38)மதுபானம், யுத்த உபகரணம், வெடிபொருட்கள் (39) கைமுறை, பகுதி கைமுறை, இலத்திரன் முறை (40) வன்பாகம், மென்பாகம், உயிர்ப் பாகம்

### பகுதி – II

(1)(1) வணிகமொன்றினை செயற்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் மிகப் பிரதான காரணி இலாபம் ஆகும். எனினும் இலாபம் உழைக்காது சமூக சேவைகளை வழங்கும் வணிக அமைப்புகளும் காணப்படுகின்றன. இதன் மூலம் இலாபம் உழைப்பவை மட்டுமன்றி இலாபநோக்கமற்ற வணிகங்களும் காணப்படுகின்றன.
உ – ம் :- பாடசாலை, பல்கலைக்கழகம், வைத்தியசாலை, சமூக சேவை நிறுவனம்.
(3 புள்ளிகள்)

(2)அ. **உற்பத்தி :-** மனிததேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்காக சந்தைக்கு வழங்கப்படுபவை.
**உற்பத்தி தொழிற்பாடு :-** உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செய்முறை ஆகும்.
(2 புள்ளிகள்)

ஆ. பொருள், சேவை, எண்ணம், இடம், நிகழ்வு, நபர்கள், ஒழுங்கமைப்பு, தகவல்
(4 விடயம் – 1 புள்ளி)

(3) **வணிகச் சூழல்**

அகச் சூழல்
- உடைமையாளர்
- ஊழியர்
- முகாமையாளர்
- வளங்கள்
- நிறுவன கலாச்சாரம்
- நிறுவனக்கட்டமைப்பு

புறச் சூழல்

**அண்மிய சூழல**
- வாடிக்கையாளர்
- வழங்குனர்
- போட்டியாளர்
- இடைநடுவர்
- செல்வாக்குடைய குழு
- புதிய வணிகங்கள்

**பேரண்ட சூழல்**
- அரசியல்
- பொருளாதாரம்
- சமூகம்
- தொழில்நுட்பம்
- இயற்கை
- மக்கள்
- பூகோளம்

(பூரண விடைக்கு 3 புள்ளிகள்)

(4)
◈ பூரண வேலைவாய்ப்பு ◈ பொருளாதார வளர்ச்சி
◈ வெளிவாரி உறுதிப்பாடு ◈ விலை பொருளாதார உறுதிப்பாடு
◈ பொருளாதார வினைத்திறன் ◈ சூழல் பாதுகாப்பு
◈ பொருளாதார சுதந்திரம் ◈ சமமான வருமானப் பரம்பல்
(குறிப்பிட 3 x 0.5 = 1.5 புள்ளி, விளக்கம் 3 x 0.5 = 1.5 புள்ளி)

(5)அ.பங்குடமைக்குத் தேவையான மூலதனத்தை ஈடுபடுத்தி நிர்வாகத்தில் ஈடுபடும் வெளிநபர்கள் அறிந்திராத பங்காளர்கள் ஆவார். (1 புள்ளி)
ஆ.பங்குடமைக்குத் தேவையான மூலதனத்தை ஈடுபடுத்தி நிர்வாகத்தில் பங்குபற்றாத வெளிநபர்கள் அறிந்திருக்கும் பங்காளர்கள் ஆவர். (1 புள்ளி)
இ.பங்குடமைக்குத் தேவையான மூலதனத்தை ஈடுபடுத்தி வெளிநபர் அறிந்திராத நிர்வாகத்தில் பங்குபற்றாத பங்காளர் ஆவார். (1 புள்ளி)

(6)சுய உதவி, சுய பொறுப்பு, சமத்துவம், ஜனநாயகம், நியாயத்துவம், தனித்துவம், நேர்மை, தடையற்ற சமூகப் பொறுப்பு, பிறர் தொடர்பான அக்கறை.
(6 x 0.5 = 3 புள்ளிகள்)

(2)(1) காசோலைமீதான உரிமையை மாற்றுகின்ற போது / வங்கியில் பணமாக மாற்றுகின்ற போது காசோலையின் முன்புறத்தில காணப்படுகின்றவாறு பெறுவோன் காசோலையின் பின்புறத்தில் எழுதுதல் கையொப்பமிடல் ஆகும.. (2 புள்ளிகள்)

**சந்தர்ப்பம் :-**1. இன்னுமொருவருக்கு கைமாற்றுதல் 2.வங்கியில் வைப்புச் செய்தல் 3. வங்கிகரும பீடத்தில் பணமாக மாற்றுதல் (1 புள்ளி)

(2) **முதன்மை :-**1. நிதிக் கொள்கையைத் தயாரித்தல்
2. செலாவணிக் கொள்கையைத் தயாரித்தல்.
3. வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமை செய்தல்
4. நாணயத்தை வெளியிடல்
5. வங்கிகள், நிதி நிறுவனங்களை முகாமை செய்தல்.
6. நிதி ஆலோசகராகத் தொழிற்படல்
(3 x 0.5 = 1.5 புள்ளிகள்)

**முகவராண்மைத் தொழிற்பாடு -** 1. பொதுப்படுகடன் முகாமை
2.செலாவணிக் கொள்கையைத் தீர்மானித்தல்
3. வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமை செய்தல்
4.ஊழியர் சேமலாப நிதியை முகாமை செய்தல் (3 x 0.5 = 1.5 புள்ளிகள்)

(3)

| மறுகாப்புதி | ஒப்புறுதி |
|---|---|
| நட்டத்தின் முழுப் பெறுமதியும் ஒரு காப்புறுதிக் கம்பனி பொறுப்பேற்றல் | நட்ட பகுதி பகுதியாகஒவ்வொருகம்பனியும் பொறுப்பேற்றல். |
| காப்புறுதிக் கம்பனியினால் ஏனைய காப்புறுதிக் கம்பனியில் ஒப்பந்தம் ஏற்படுத்துதல | காப்புறுதி செய்பவரால் பல்வேறு காப்புறுதி கம்பனிகளும் மேற்கொள்ளுதல். |

(4) **கட்டமைப்பு** (3 புள்ளிகள்)
1.தனியார் அரசதுறை ஈடுபடுதல்
2. பயணிகள் போக்குவரத்தில் தனியார் 60%உம் அரசு 40% ஈடுபடல்
3. பண்டம் போக்குவரத்தில் பெருமளவில் தனியாரே ஈடுபடுதல்.
(3 x 0.5 = 1.5 புள்ளிகள்)

**குறைபாடு**
1.வீதிகள் பழுதடைந்துள்ளமை 2. பாதை நெரிசல்
3.பொருத்தமற்ற வாகனங்கள்
4.பயணிகள் போக்குவரத்திற்கு இடையில் தொடர்பு இன்மை.
5.நேர அட்டவணைப்படி செயற்படாமை (3 x 0.5 = 1.5 புள்ளிகள்)

(5)இலத்திரன் சில்லறை வியாபாரம்
◈ நேரடி விற்பனை ◈தபால் மூலமான விற்பனை
◈ தொலைபேசி மூலமான விற்பனை
◈ தன்னியக்கம் பொறிகள் தொலைக்காட்சி மூலமான விற்பனை
(6 x 0.5 = 3 புள்ளிகள்)

(தொடரும்)

## லண்டனிலிருந்து வந்தவர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

லண்டனில் இருந்து விடுமுறையில் கொழும்பு வந்த தமிழர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சர்வதேச குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேற்கு லண்டன் வெம்பிளிப் பகுதியைச் சேர்ந்த இவர் அண்மையில் பிரித்தானியாவில் நிரந்தர வதிவிட உரிமை பெற்றுக் கொழும்பு வந்துள்ள நிலையிலேயே கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

இதனிடையே மேற்குலக தேசங்களில் இருந்து விடுமுறையில் கொழும்புக்கு வருகை தரும் தமிழர்களை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கடும் கண்காணிப்பிற்கும் விசாரணைக்கும் உட்படுத்துவதற்கான கட்டளையை கடந்த மாதம் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பிறப்பித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (5-4)

# தனியார் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு எதிராக 15 ஆயிரம் மாணவர்களைத் திரட்டி போராட்டம்!

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திட்டம்

(கொழும்பு)

தனியார் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு எதிராக பாரியளவிலான எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

15ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்களை கொழும்பிற்கு அழைத்து பாரியளவிலான எதிர்ப்புப்போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப்படவுள்ளது.

தனியார் பல்கலைக்கழக உருவாக்கத்திற்கு எதிரான முதல் கட்ட போராட்டமாக இந்த நடவடிக்கை அமையும்.

முன்னாள் கல்வி அமைச்சர் சீ.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச கல்வியை சீர்குலைப்பதற்கு எவருக்கும் அனுமதியளிக்கப் படமாட்டாது.

நாட்டில் 8 ஆயிரத்து 795 அரசாங்க பாடசாலைகளும் 17 பல்கலைக்கழகங்களும் சில தனியார் கல்வி நிறுவனங்களும் இயங்கி வருகின்றது.

வருடாந்தம் நடைபெறும் உயர்தர பரீட்சையில் சித்தி எய்தும் எட்டு வீதமான மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் நடவடிக்கைகள் இலங்கையின் இலவசக் கல்வி நடவடிக்கைகளுக்கு பாரியளவு பாதிப்பை ஏற்படுத்தும்.



ஆரம்பகட்டப் போராட்டங்கள் வெற்றியடையா விட்டால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என அனைத்துப் பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலை வரும் அமைப்பாளருமான உந்துல் பிரேம ரட்ண குறிப்பிட்டார்.

இதேவேளை தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கும் திட்டம் எந்த காரணத்திற்காகவும் நிறுத்தப்படமாட்டாது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியான தாம் கல்வி நடவடிக்கைகளை சீர் குலைக்க அனுமதிக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கிளைகளில் 20 வீதமான இலங்கை மாணவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். (5-4)

# இலங்கையர்கள் உள்ளிட்ட 60 சட்ட விரோத குடியேற்றக்காரர்கள் மெக்ஸிக்கோவில் மீட்பு

தென் மெக்ஸிக்கோவில் இலங்கையர்கள் உள்ளிட்ட 60 சட்ட விரோத குடியேற்றக்காரர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

கொள்கலன் ஒன்றின் ஊடாக சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் பிரவேசித்தவர்களே தென்மெக்ஸிக்கோ மாநிலமான சிப்பாஸில் வைத்து அந்நாட்டு பொலிஸாரால் மீட்டுள்ளனர்.

எக்ஸ் கதிர்மூலமான பரிசோதனையின் போது கொள்கலன்களில் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் மறைந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கை, இந்தியா, மத்திய அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடங்கு வதாகவும் அவர்களில் 15 பேர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமான முறையில் குடியேறும் நோக்கில் இவர்கள் மெக்ஸிக்கோவிற்கு சென்றிருக்கலாம் என அந்நாட்டு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (4-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### நுணா /மஞ்சநீராட்டி

Botanical Name-Morinota tinctoria
Family - Rubiaceae
Engl- Indian Mulberry
Sinh- Ahu

நடுத்தர மர வகுப்பைச் சார்ந்தது. அடிமரம் மங்கிய மஞ்சள் நிறமாகவும் மரப்பட்டை சாம்பல் கலந்த மஞ்சள் நிறமாகவும் ஆழமான வெட்டுக்களை உடையதாகவும் வெளிப்புறம் கரடுமுரடாகவும் உட்புறம் மென்மையாகவும்( spongy) காணப்படும். இலைகள் சுமார் 4,5 அங்குல நீளமும் 2 அங்குல அகலமுடைய நீள் வட்ட வேலுருவாக காணப்படும். இலைக்காம்பு 1.3-2.5 செ.மீ நீளமுடையது. பூக்கள் வெள்ளை நிறமாகவும் 5 இதழ்களையுடையதாகவும் காணப்படும். காய் உருண்டையாகவும் பசுமை நிறத்துடனும் அதில் பல சிறு முழி(உருளை) போன்ற மைந்திருக்கும். நுனிக்காய் பழுத்ததும் கருமை நிறமாகி காற்றடித்தால் கீழே விழுந்து நசுங்கும். பழம் இனிப்பாக இருக்கும்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

நகரங்கள், கிராமங்கள் எங்கும் தன்னிச்சயாக வளரக்கூடியது.

**மருத்துவப் பயன்கள்**

மஞ்ச நீராட்டி என்பது நாளடைவில் மஞ்சனாட்டி என்பதாகவும் பின்பு மஞ்சனாத்தி என்று மருவியிருக்கலாம். பண்டையகாலத்தில் இரசாயன கலர் உற்பத்தியில்லாதபோது இதன் பட்டைகளில் சாயம் எடுத்து துணிகளுக்கு கலர் போடுவது வழக்கமாக இருந்தது. இந்த மஞ்சனாத்திக்கு நம் நாட்டு வழக்கப் பெயர் நுணு என்பதாகும்.

✪நல்ல பசுமையான நுணா இலையை இடித்துப் பிழிந்தசாறு ஒரு பங்கு, உத்தாமணி இலைச்சாறு, நொச்சியிலைச்சாறு, பொடுதலைச்சாறு ஆகிய மூன்றும் ஒரு பங்கு சேர்த்து யாவும் ஒன்றாகக் கலக்கி 6 மாத குழந்தைக்கு வேளை ஒன்றிற்கு 40-60 துளிகள்,ஒரு வயதிற்கு மேற்பட்ட குழந்தைக்கு 2 தேக்கரண்டியளவு 3 நாட்களுக்கு கொடுத்து வர மந்தரோகம் தீரும்.

✪நுணா, உத்தாமணி, நொச்சி, பொடுதலை நான்கும் சம அளவில் சேர்த்து சட்டியில் போட்டு வறுத்து பொடித்துக் கொள்ளவும். மிளகு,சுக்கு, சீரகம்,ஓமம், பெருங்காயம் வகைக்கு 10 கிராம் எடுத்து எள்நெய் விட்டு வறுத்து பொடி செய்க. இரண்டையும் 2:1 பங்




காக சேர்த்து கலந்து 2 கிராம் அளவு வெந்நீரில் கலந்து கொடுக்க குழந்தைகட்கு ஏற்படும் சுரம் குணமாகும்.

**வெண்குஸ்டத்திற்கு:**

நுணா இலைத்துளிர், பழுத்தது சம அளவில் சேர்த்து மைபோல அரைத்து 1/4 கிலோ எடுத்து 30 கிராம் காட்டுச் சீரகம் அரைத்து இத்துடன் சேர்த்து, இரும்பு வானலியில் ஒரு கிலோ எள்நெய் விட்டு அதில் அரைத்த கல்க்கத்தைப் போட்டு காய்ச்சவும். மெழுகு பதம் வந்ததும் கல்க்கத்தை தனியே எடுத்து வைக்கவும். இதனை நாளும் காலை, மாலை 5 கிராம் அளவு சாப்பிடவும். வடித்த எண்ணெயை வெண்புள்ளியில் தடவிவரவும். இவ்வாறு6-8 மாதங்கள் வரை பயன் படுத்திவர வெண்குஸ்டம் குறைவடையும்.

**நுணுக்காய்**

நுணுக்காய் பற்களை பாதுகாக்கக் கூடியது. பல் சொத்தை விழுதல், பல்வலி எவ்வளவு கஷ்ரமானதும் சரி செய்யும். இதற்கு வேண்டியளவு நுணுக்காயை சுத்தமாக துடைத்து உரலில் போட்டு நன்றாக இடித்து ஆட்டி அதனுடன் கறியுப்பு சேர்த்து அடை தட்டி உலர்ந்ததும் ஒரு மண்சட்டியில் அடையை வைத்து வாய் பெருந்த மேற் சட்டியால் மூடி சீலை மண் செய்து உலர்ந்த பின் 15 வறட்டியில் எரித்து (புடமிட்டு) ஆறியபின் சட்டியைப் பிரித்து அடையை எடுத்து அம்மியில் பட்டுப் போல அரைத்து புட்டியில் பத்திரப்படுத்தவும். தேவையான போது மேற்படி பொடியால் பல் துலக்கி வர பற்கள் சம்பந்தமான நோய்கள் தீரும்.

**நுணுப்பட்டைத் தைலம்**

முற்றிய நுணா மரப்பட்டை ஒரு கிலோ நிறுத்து எடுத்து நன்றாக இடித்து அதில் 6 லீற்றர் தண்ணீர் விட்டு 2லீற்றர் ஆகும் வரை சுண்டக் காய்ச்சி நீரை மட்டும் எடுத்து, அதனுடன் 1500 மில்லி நல்லெண்ணெய் ,500 மில்லி எலுமிச்சம் பழச்சாறு ,500 மில்லி இளநீர் இவைகள் யாவும் ஒன்றாகக் கலக்கி மறுபடியும் சிறுதீயில் மேற்படி சாறு சுண்டி எண்ணெயாகும் வரையில் காய்ச்சி எடுத்துக் கொண்டு வாரம் இருமுறை ஸ்நானம் செய்யலாம். இதனால் தோல் வியாதிகளான கிரந்தி, கரப்பான், சிரங்கு, வியர்க்குரு கட்டிகள் முதலிய வியாதிகளைப் போக்கும்.

✪காவிக்கலர் சாயத் துணிகளை தோய்க்க இதன் முற்றிய மஞ்சள் நிறமான பட்டைகளை வெட்டி உலர்த்தி எடுத்த பின் வெந்நீரில் ஊற வைத்தால் அதில் மஞ்சள் நிறச் சாயம் இறங்கும். அதில் வெள்ளை நிறத் துணிகளை அமுக்கின்றி தோய்த்துலர்த்தினால் சிவப்பு, மஞ்சள் நிறமான கலர் ஏறும். இதனை அணிவதால் சிற் சில உஎநோய்கள் தீருவதாகத் தெரிகிறது.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

**வேர்**

மலச்சிக்கலுக்கு நுணாமரவேர் 10 கிராம் எடுத்து கழுவி இடித்து 200 மில்லி நீர் விட்டு 50 மில்லி ஆக வடித்து 30 மில்லி மாலையில் எடுக்க அடுத்த நாள் காலை மலம் இளகி வெளியேறும்.

துணிகளுக்கு இம் மரப்பட்டை மஞ்சள் ï é Í › À ì J é D ' u ® k › V_ Ö › u z "மஞ்சநீராட்டி" என்ற பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும். காலப்போக்கில் மஞ்கணாத்தியாக மாறியது நுணாமரம்.

# ஆளை மயக்கும் 'ரூபர்ட்'



காட்டில் வசிக்கும் விலங்குகளில் மிக அழகானது புள்ளிமான். அதன் குண்டுக் கண்கள் , வழுவழுப்பான உடலில் உள்ள புள்ளிகள் , இவை எல்லாவற்றையும் விட அது துள்ளி ஓடும் அழகை நாள் முழுதும் பார்த்துக் கொண்டேயிருக்கலாம்.இப்படி அழகு வாய்ந்த மான்களுக்கு எல்லாம் பேரழகு மான் எனப் பெயர் பெற்றுள்ளது ஒரு குட்டிமான்.



இந்த மானை இப்படி வர்ணிக்க அதன் உயரமே காரணம்.நம் உள்ளங்கையில் அடங்கி விடும் அளவுக்குத்தான் இந்த மான் இருக்கிறது. உலகிலேயே மிக அழகான குட்டி மான் என்ற பெயரெடுத்த இதன் பின்னால் ஒரு சோகக் கதை உண்டு.

இது சிசுவாக வயிற்றில் இருந்த போது,ஒரு கார் விபத்தில் சிக்கியது தாய் மான்.படுகாயமடைந்த தாய் மானுக்கு அறுவைச் சிகிச்சை செய்து குட்டி மானைக் காப்பாற்றினர் அமெரிக்க கால்நடை மருத்துவர்கள்.




ஆனால், தாய் மான் இறந்தது.விபத்துக்காளானதால் இந்த அழகிய குட்டி மான் சரியாக வளரவே இல்லை.இதனால் இதை கால்நடை மருத்துவர்கள் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகின்றனர்.அந்தக் குட்டிமானுக்கு "ரூபர்ட்" என்று பெயரும் வைத்துள்ளனர்.



# நூற்றாண்டு மீன் !

சுவீடன் நாட்டு மேற்குக் கடற்கரையில் 3 மீற்றர் நீளத்தில் கிடைத்த அரிய மீன் எல்லோரையும் மலைக்க வைத்து விட்டது. கிங் "ஒப்ஹெரிங்ஸ்" என்றழைக்கப்படும் இந்த மீன் நூறு ஆண்டுகளுக்கு முன்பே அழியும் மீன் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டது.130 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த மீன் இப்போது கரை ஒதுங்கி எல்லோரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் அந்நாட்டு மீன் ஆராய்ச்சியாளர்கள் உற்சாகமடைந்துள்ளனர். மீன் அருங்காட்சியகத்தில் இதை பதப்படுத்தி வைக்க உள்ளனர்.


## பல்ப் தரும் இசை!



குண்டு பல்ப்க்கு மாற்றாக எவ்வளவோ பல்புகள் சந்தைக்கு வந்து விட்டன. கடைசியாக வந்தது லெட் பல்ப். இந்த பல்ப்பில் இரு ஸ்பீக்கர்கள் இணைக்கப்பட்டிருப்பது சிறப்பு.

பல்பை ஒன் செய்தவுடன் ஒளி மட்டுமல்ல. மெல்லிய இசையும் வருகிறது. பெரிய ஹோட்டல்களில் உள்ள உணவு விடுதிகள் மற்றும் கேளிக்கை விடுதிகளில் பயன்படுத்தும் வகையில் இந்த பல்ப் அறிமுகமாகியிருக்கிறது.

# படிக்கட்டு வல்லவன் !



ஸ்டண்ட் நடிகர்கள் சினிமாவில் மட்டுமல்ல, நிஜவாழ்க்கையிலும் சாகசம் செய்வதில் கில்லாடிகள். ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த சென்டி என்ற ஸ்டண்ட நடிகர் சுரங்கப்பாதை களில் உள்ள எஸ்கலேட்டர் படிக்கட் டில் சறுக்கி சாகசம் செய்வதை வாடிக்கையாக வைத்துள் ளார்.


சறுக்கு விளையாட்டை பனி படர்ந்த மலைப்பகுதிகளிலேயே சறுக்கி விளையாட முடியும். இவர் புதுமையாக படிக்கட்டில் அந்த விளையாட்டை அரங்கேற்றம் செய்து வருகிறார்.

# உலகைச் சுற்றி

AROUND THE WORLD

ஆர்.யூ.பாலமுருகன்

## காகிதப் பிரியன்!



காகிதத்தில் நாற்காலிகள், மேசைகள் செய்ய முடியும் என்று நிருபித்துள்ளார் இத்தாலியைச் சேர்ந்த வால்டர் டுவான்ஸ்சோ. காகித நகைகள், கைவினைப் பொருட்கள் என பல படைப்புக்களை உருவாக்கி அசத்தியுள்ள இவர்,இப்போது காகித நாற்காலிகள்,மேசைகள் செய்துள்ளார். விரைவில் காகித ரீசோர்ட் செய்யத் திட்ட மிட்டுள்ளதோடு, தனது அறை முழுவதையும் காகிதத்தாலேயே அலங்கரித்துள்ளார்.

## பொம்மை ஆஸ்பத்திரி!

ஜேர்மனியில் பேர் லின் நகரில் பொம்மை மருத்துவமனை ஒன்றை அறிமுகம் செய்துள்ளனர். "டெடிபேர்" என்றழைக்கப்படும் இந்த மருத்துவமனையில் பல விதமான பொம்மைகளுக்கு அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது.



காதில் பூ சுற்றும் வேலையாக இருக்கிறதே என்று நினைக்காதீர்கள். குழந்தைகளுக்கு ஊசி,மருந்து, மாத்திரை, டாக்டர் என்றாலே ஒருவித பீதி ஏற்படும்.

குழந்தைகள் விரும்பும் பொம்மைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தால் டாக்டர் மேல் இருக்கும் பயம் நீங்கும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு!

# சம்பியன் நாய் !

டில்மேன், உலகில் அதிவேக ஸ்கேட்டிங் வீரர். இன்றுவரை இவரது சாதனையை யாரும் நெருங்க முடியவில்லை. இப்போது தான் அதை லெல் கொஞ்சம் நெருங்கி வந்துள்ளார்.

யார் இந்த சூறாவளி வீரர்கள் என்று குழம்ப வேண்டாம். இருவரும் புல்டாக் இனத்தைச் சேர்ந்த நாய்கள். அமெரிக்காவில் நாய்களுக்கான ஸ்கேட்டிங் போட்டி மிகப் பிரபலம். பார்க் bark இன் தி பார்க் park என்றழைக்கப்படும் இந்தப் போட்டியில் ஒவ்வொரு முறையும் சம்பியன் பட்டம் பெறுபவர் வேறு யாருமல்ல டில்மேன் தான்!





# சீபா ஒப்பந்தம் குறித்த தகவல்களை பாராளுமன்றில் சமர்ப்பிக்காதது ஏன்?

## ஐக்கிய தேசியக்கட்சி கேள்வி

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்துடன் செய்து கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள சீபா உடன்படிக்கை குறித்த தகவல்களை அரசாங்கம் ஏன் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு தயக்கம் காட்டுகிறது என ஐ.தே.க கேள்வி எழுப்பியுள்ளது.

நாட்டுக்கு பாதகமான எந்தவிதமான நிபந்தனைகளும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என தெரிவிக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,ஏன் அது குறித்த நிபந்தனைகளை நாடாளுமன்றில் வெளிப்படுத்த தயங்குகிறார் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு பாராளு மன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த் தன மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்படவுள்ள சீபா ஒப்பந்தம் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தவேண்டியது அவசியமானது.

இந்த ஒப்பந்தம் தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் விளக்கமளிப்பதாக உறுதியளித்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சட்ட விரோத கட்டடண நிர்மாணங்களால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதாக தெரிவிக்கும் அரசாங்கம் சகல சட்டவிரோத கட்டட நிர்மாணங்களும் தமது ஆட்சிக்காலத்தில் உருவானவை என்பதனை நினைத்துப்பார்க்காதது நகைப்பிற்குரிய விடயமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். (5-4)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் பேராபத்து

## ஹெல உறுமய அறிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் பேராபத்தானது என ஜாதிக ஹெல உறுமயக்கட்சி அறிவித்துள்ளது.

அக்கட்சியின் செயலாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை குறித்து கட்சியின் நிலைப்பாட்டை அறிக்கை மூலம் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற சர்வாதிகாரியே நிறைவேற்று ஜனாதிபதியாவார். இலங்கையின் ஜனாதிபதி கட்டுப்பாடுகள் எவையும் இல்லாத பரிபூரண அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் பேராபத்தானது.

இதனால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமல் பாராளுமன்ற ஆட்சியை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4)

# கொக்காவிலில் 575 அடி உயரத்தில் தொலைத்தொடர்புக் கோபுரம்

## 3 மாத காலத்தில் பணிகள் பூர்த்தியாகும்

கொக்காவில் தொலைத்தொடர்பு கோபுர நிர்மாண வேலைகளை 3 மாத காலத்திற்குள் பூர்த்தி செய்ய முடியும் என்று தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இத்திட்டம் 250 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

575 அடி உயரமான இந்த கோபுரத்தின் மூலம் வட பகுதிக்கான சகல தொலைத் தொடர்பு நடவடிக்கைகளையும் மேற் கொள்ள முடியும்.

இந்தக் கோபுரத்தை அமைப்பதற்கான மொத்த செலவீனங்களும் அதை உபயோகிக்கும் தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்து 10 வருட காலத்தில் வசூலிக்கப் படும். (5)




கொழும்பு-கட்டுநாயக்காவுக்கான ஏயார்போர்ட் எக்ஸ்பிரஸ் எனும் துரித கதி புகையிரத சேவை நேற்றுக்காலை ஆரம்பித்துவைக்கப்பட்டது.கொழும்பில் நடைபெறவுள்ள ஐஃபா சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் கலந்துகொள் வதற்காக இலங்கை வருகின்ற அந்நாட்டு நட்சத்திரங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து கொழும்பை வந்தடையும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த புகையிரதம் சேவையில் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம்.

# 02.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- *1615 - பிரெஞ்சு கத்தோலிக்க மதப்பரபபுனர்களின் முதற்தொகுதியினர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தனர்.*
- *1896 - மார்க்கோனி தான் புதிதாகக் கண்டுபிடித்த வானொலிக்கான காப்புரிமத்ததைப் பெற்றார்.*
- *1924 - ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த அனைத்து பழங்குடிகளுக்கும் அமெரிக்கக் குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தை அதிபர் கால்வின் கூலிட்ஜ் அறிமுகப்படுத்தினார்.*
- *1946 - இத்தாலியில் முடியாட்சியை குடியரசாக மாற்றும் முடிவுக்கு மக்கள் பெருமளவு ஆதரித்து வாக்களித்தனர். இத்தாலியின் மன்னன் நாட்டை விட்டு வெளியேறினான்.*
- *1953 - இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக முடிசூட்டு விழா முதற்தடவையாக தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது.*
- *1965 - வியட்நாம் போர் முதலாவது தொகுதி அவுஸ்திரேலியத் துருப்புகள் தெற்கு வியட்நாமை அடைந்தது.*
- *1966 - நாசாவின் சேர்வெயர் 1 விண்கலம் சந்திரனில் இறங்கியது. சந்திரனில் மெதுவாக இறங்கிய முதலாவது அமெரிக்க விண்கலம் இதுவாகும்.*
- *1992 - டென்மார்க் மக்கள் மாஸ்ட்ரிக் உடன்பாட்டுக்கு எதிர்த்து வாக்களித்தனர்.*
- *1999 - பூட்டானில் முதற் தடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.*
- *2003 - வேறொரு கோளுக்கான (செவ்வாய்) மார்ஸ் எக்ஸ்பிரஸ் என்ற தனது முதலாவது விண்கலத்தை ஐரோப்பிய ஆய்வு மையம் ஈசா கசகஸ்தானில் இருந்து ஏவியது.*

### பிறப்புகள்


- *1956 - மணிரத்னம், தமிழ் இயக்குநர்*
- *1965 - ஸ்டீவ் வா மற்றும் மார்க்வா, அவுஸ்திரேலிய துடுப்பாட்டக்காரர்கள்.*

### இறப்புகள்

- *1842 - பி. கந்தப்பிள்ளை (ஆராய்ச்சிக் கந்தர்) யாழ்ப்பாணப் புலவர், வைத்தியர், நாவலரின் தந்தை.*
- *1882 - கரிபால்டி, நவீன இத்தாலியை உருவாக்கியவர்.(பி.1807)*


**1943 - இந்திய இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா பிறந்தார்.**

**இந்தியாவின் சிறந்த திரைப்பட இசையமைப்பாளர்களுள் ஒருவரான இவர் அன்னக்கிளி என்ற தமிழ்த் திரைப் படத்துக்கு இசை அமைத்ததின் மூலம் 1970 களின் பிற்பகுதியில் அறிமுகமானார். இளையராஜா இதுவரை 800ற்கும். மேற்பட்ட தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் , இந்திதிரைப் படங்களுக்கு இசை யமைத்துள்ளார். இவருக்கு இந்திய அரசின் படைத் துறை - சாரா விருதுகளில் மூன் றாது உயரிய விரு தான பத்ம பூசண் விருது 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.**















இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனமும் கல்வி அமைச்சும் இணைந்து டி.எஸ்.ஐ. நிறுவன அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கரப் பந்தாட்ட பயிற்சியாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி முகாம் யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், இசுறுபாய விளையாட்டுத்துறையின் பிரதிப்பணிப்பாளர் நிகால் பெர்னாண்டோ மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகி யோர் உரையாற்றுவதையும், மத்திய கல்லூரி அதிபர் வி.ஓங்காரமூர்த்தி, ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் டி.எஸ்.ஐ. நிறுவன ஆணையாளர் மற் றும் அமைச்சர் டிலான் பெரேரா ஆகியோர் இணைந்து ஒரு இலட்சம் பெறுமதியான கரப்பந்தாட்ட உப கரணங்களை யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத் தலைவர் வி.ஏகாம்பரத்திடம் கையளிப்பதையும் பயிற்சி முகாமில் கலந்துகொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என். குமார்)

## நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சினால் பொதுச்சுகாதார பரிசோதகர், மருந்தாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு கடிதங்கள் கிடைக்கப்பெற்ற யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தங்களிற்கான நேர்முகப்பரீட்சை நடைபெறும்திகதியன்று காலை 8.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு சமூகமளிக்குமாறு யாழ். சுகாதார சேவைகள் பதில் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

(5-4)

# பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் 2013இல் இலங்கை வருவார்!

2013 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாக பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் பேச்சாளர் டொமினிக் வில்லியம்ஸ் தெரிவித்தார்.

இலங்கையில் 2013 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்ளும் முகமாகவே இவர் இலங்கைக்கு வர விருப்பதாகவும் அவர் கூறினார்.

மேற்படி மாநாடு 2011 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள நிலையில் அதற்கு அடுத்ததாக இலங்கையில் நடைபெற விருப்பதாகவும் டொமினிக் வில்லியம்ஸ் குறிப்பிட்டார்.

இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை நடைபெற்று வருகின்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் உலகமயமாக்கல், பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறுவது வழமையாகும்.

சர்வதேச சமூகத்திற்கான சமாதானம், பாதுகாப்பு,ஜனநாயகம்,நல்லாட்சி, அபி விருத் தித் திட்டங்கள், முகா மைத்துவம், கல்வி, சுற்றாடல், பால் சமத்துவம், சுகாதாரம், மனித உரிமைகள், தகவல் மற்றும் தொடர்பாடல், தொழில் நுட்பம், சட்டம், பல்வகை வர்த்தகம், இளைஞர் பாதுகாப்பு ஆகியன தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம் பெற்றிருந்தன.



இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டிஷ், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, கனடா ஆகிய நாடுகள் உட்பட இதில் 54 நாடுகள் தற்போது அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(4-5)

# இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகத்தில் நிலவும் தவறான கருத்துக்கள் களையப்படும்

## இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகத்தில் நிலவும் தவறான எண்ணக்கருக்களை களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜப்பான் உறுதியளித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏதேனும் பிழையான கருதுகோள்கள் நிலவினால் அதனை களைவதற்கு தயங்கப் போவதில்லை என ஜப்பான் அறிவித்துள்ளது.

பிரதமர் டி.எம்.ஜயரட்னவை இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கொனியோ தக்காஷி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சிறுபான்மை மக்களை பெரும்பான்மை மக்கள் அடக்குமுறைக்கு உட்படுத்துவதாக சர்வதேச சமூகத்தில் ஓர் தவறான எண்ணக்கரு உருவாகியுள்ளதெனவும் எனினும் சிறுபான்மை மக்களின் உரிமைகள் முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் ஜெயரட்ன தெரிவித்துள்ளார்.

ஜப்பான் போன்ற அரசாங்கங்கள் இலங்கையின் நன்மதிப்பை சர்வதேச சமூகத்தில் நிலைநாட்ட வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் இன ஐக்கியம் தொடர்பான விவகாரங்கள் திருப்தி அளிக்கும் வகையில் காணப்படுவதாக ஜப்பானிய தூதுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த காலங்களைப் போன்றே எதிர் காலத்திலும் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஜப்பான் தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

(4-5)

# ஐஃபா சர்வதேச இந்திய திரைப்பட விழா; தென்னிந்திய நடிகர் இலங்கை வருகை

(கொழும்பு)

ஐஃபா சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் கலந்துகொள்ளும் முகமாக,தென்னிந்திய நடிகர்கள் சிலர் நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

தென்னிந்திய நடிகர்களான விவேக் ஓபராய், வுமன் ஈரானி ,லாரா தத்தா, ரிடெஷ் தேஷ்முகி ஆகியோரே இலங்கையை வந்தடைந்திருப்பதாக இலங்கை சுற்றுலாச் சபை தெரிவித்தது.

இவர்களில் வுமன் ஈரானி, லாரா தத்தா, ரிடெஷ்முகி ஆகியோர் எதிர்வரும் 5ஆம் திகதி சுகததாச உள்ளக அரங்கில் நடைபெறவிருக்கும் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்துகொள்ளவிருப்பதாகவும் அந்த சபை குறிப்பிட்டது.

இது தவிர பல தென்னிந்திய நடிகர்கள் மற்றும் இசை வல்லுனர்கள் இன்று இலங்கையை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இலங்கை சுற்றுலாச் சபை குறிப்பிட்டது.

எனினும் இவ்விழாவில் நடிகர்களான ஷாருக்கான் ,அர்ஜுன் ராம்பால், அபிஷேக் பச்சன், ஐஸ்வர்யாராய் ஆகியோர் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று தெரிய வருகிறது.

(4-5)

ஒளிவிளக்குகள் வைத்திருப்போர், மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக - பிளேட்டோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எங்கள் புத்திஜீவிகள் முன்வர வேண்டும்

இரண்டாம் உலகப்போரில் அழிக்கப்பட்ட யப்பான் இப்போது உலக நாடுகளுக்குத் தொழில்நுட்பத் தாயாக நிமிர்ந்து நிற்கின்றது.

இதுபோல ஒரு காலத்தில் உலகில் நொந்து கெட்டுப் போனவர்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றனர்.

எனவே காலம் என்பது ஓர் இனத்திற்கோ மொழிக்கோ, உரியதல்ல. அது எல்லோர் பக்கமும் வீசக்கூடியது. அதை பயன்படுத்திக் கொள்வதில்தான் எங்கள் எதிர்கால ஆரோக்கியம் தங்கியுள்ளது.

அதேநேரம் எங்கள் வாழ்வுக்காகவும் உயர்வுக்காகவும் நாங்கள் அதிகம் பாடுபட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இழந்தவற்றை நினைந்து நாமே நம்மை இழந்து போவதும், சோகத்தில் துவண்டு போவதும் எங்கள் வாழ்வுக்கு குந்தகம் விழைவிக்க எண்ணுவோருக்கு துணைசெய்வதாகவே அமையும்.

எனவே நாங்கள் வாழவேண்டும். எங்களை வீழ்த்தி இன்பங்கண்ட நாடுகளுக்கு எங்கள் முன்னேற்றம் பாடமாகவும் படிப்பினையாகவும் இருக்கவேண்டும்.

நாங்கள் கல்வியின் புதல்வர்கள். எங்களிடம் எல்லாத்திறன்களும் உள்ளன. தியாகமும் உண்டு.

எங்கோ ஒரு பலவீனம். அந்தப் பலவீனத்தை உடைத்து விட்டால் எங்களிடம் பலர் மண்டியிடுவர்.

அறிவாலும் அர்ப்பணிப்பாலும் எழுந்து நிற்க வேண்டிய அவசியத்தை - தேவையை இறைவன் நமக்கு உணர்த்தியுள்ளான்.

இருந்தும் எங்களில் பலர் எதுவும் உணராதவர்களாக வாழப் பழகிக் கொண்டோம். இனமும் மொழியும் மதமும் பற்றறுக்கப்பட்டு விரோதத்தில் மட்டுமே விருப்புடையவர்களாகிக் காலம் கழிக்கின்றோம்.

இந்தப் பரிதாப நிலை இளம் சமூகத்திடம் அதீதமாக காணப்படுகின்றது. இந்தக் குறைபாட்டை வேரறுக்க எங்கள் புத்திஜீவிகள் முன்வரவேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் தனக்காக வகுத்துக்கொண்ட எல்லை வேலிகளை உடைத்தெறிந்துவிட்டு சமூகத்தின் எழுச்சியில், விழிப் பூட்டலில் களமிறங்குவது காலத்தின் கட்டாய தேவை.

ஓ! தமிழ் இளைஞனே! நீ என்ன செய் கிறாய்?

கடத்தல்,கொள்ளை,களவு,பாலியல் விரசம் இதுவா உன்வேலை!

யாருக்காக செய்கிறாய்! இந்த இனங்கண்ட அழிவு உனக்குத் தெரியாதா?

மதுபோதையில் உன் வாழ்வை நாசமறுக்க நீ எங்கே கற்றுக்கொண்டாய். இப்படிக் கேட்க எங்கள் தமிழ் மண்ணில் யாருளர்?

கீழிறங்கி, இளைஞனே நாமிருக்கிறோம். அஞ்சற்க என்று அவன் தோளில் தட்டினால் திரும்பிப் பார்ப்பான். அந்தப் பார்வையில் பல்கலைக்கழகம் தெரியும். படிப்புத் தெரியும். இப்படியும் வாழலாம் என்ற அற்புதம் தெரியும்.

அவன் மாறுவான். சமூகம் மாறும். அதைச் செய்ய புத்திஜீவிகள் முன்வரவேண்டும். அட என்ர பிள்ளையை வெளிநாட்டுக்கு அனுப்பி படிக்கவைக்க நேரம் போதாமல் இருக்கும் போது - இந்த நேரத்தில் வீதியில் திரிகின்ற இளைஞனின் தோளில் தட்ட கீழிறங்கவா என்று எவரும் கேட்டுவிடாதீர்கள்.

அப்படிக் கேட்டால் இப்போது நடக்கும் சிறுதொகைக் கான கொலைக் கலாசாரம் பாதைமாறி எங்களையும் பலியெடுக்கும். கவனம். சமூக முன்னேற்றம் நாம் வாழ்வதற்கு அவசியம்.

# இராணுவ நீதிமன்ற நீதிபதியொருவர் புலிகளிடம் ஊதியம் பெற்றவர்!

## ஜெனரல் சரத் பொன்சேகா முறையீடு

நாடாளுமன்ற உறுப்பினர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிராக நிறுவப்பட்டுள்ள இரண்டாவது நீதிமன்றத்தின் நீதிபதியொருவர் விடுதலைப் புலிகளிடம் ஊதியம் பெற்று வந்தார் என ஜெனரல் சரத் பொன்சேகா அண்மையல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனக்கெதிராக நிறுவப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றத்தை இரத்துச் செய்ய உத்தரவிடுமாறு கோரியே பொன்சேகா அந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

தனக்கெதிராக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகளில் ஒருவரான மேயர் ஜெனரல் ஹத்துருசிங்க யுத்தம் நடைபெற்ற காலத்தில் விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் விடுதலைப் புலிகளிடம் ஊதியம் பெறுவோரின் பட்டியலில் இடம்பெற்றிருந்ததாகவும் ஜெனரல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தான் இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் மேயர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் இராணுவ நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சியங்களைச் சமர்ப்பித்ததற்காக தண்டனை பெற்ற ஒருவர் எனவும் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் இராணுவத்தின் நிரந்தர நீதிபதியான சிரேஷ்ட சட்டத்தரணியாகஇருப்பவர் அரசாங்கத்தற்கு நெருக்கமானவர் எனவும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக சட்டத்தரணியை நியமிப்பது தவறானது எனவும் பொன்சேகா தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

(ச-5)

# பொன்சேகாவின் ஆட்சேபனை மனுமீதான விசாரணையிலிருந்து 2 நீதியரசர்கள் விலகல்

(கொழும்பு)

இராணுவ நீதிமன்ற ஆட்சேபனை மனுமீதான விசாரணையிலிருந்து இரு நீதியரசர்கள் விலகியுள்ளனர். அனில் குணரட்ண மற்றும் ரஞ்சித் சில்வா ஆகிய இரு நீதியரசர்களுமே விலகிக் கொண்டுள்ளனர்.

தனக்கு எதிரான இராணுவ நீதிமன்றத்தை ஆட்சேபித்து ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் சத்யா ஹெட்டிஹே மற்றும் விசாரணையிலிருந்து விலகக் கொண்ட மேற்படி இரண்டு நீதியரசர்கள் ஆகியோரால் விசாரிக்கப்பட்டு வந்தது.

விலகிய இரண்டு நீதியரசர்களும் இதற்குமுன் பொன்சேகாவிற்கு எதிரான இராணுவ நீதிமன்ற நடவடிக்கையை நிறுத்த தீர்ப்பு வழங்கியிருந்தனர். அந்தத் தீர்ப்புக்கு தலைமை நீதியரசர் இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனைத்தொடர்ந்து இரண்டு நீதியரசர்களும் வழங்கிய தீர்ப்பு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது. (ச-5)

# பல்கலைக்கழக மாணவி துவாரகாவின் பெற்றோர் மனித உரிமைக்குழுவில் முறையீடு

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குள் வைத்து கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி இராசையா துவாரகாவை விடுதலை செய்யக்கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்றுப் பிற்பகல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

துவாரகாவின் பெற்றோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகளை நேற்று நண்பகல் பார்வையிட்ட பெற்றோர், அதனைத் தொடர்ந்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் மனுவொன்றினையும் தாக்கல் செய்துள்ளனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரத்னவால் இதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் பிறந்த தனது மகள் கிளிநொச்சியிலேயே வளர்ந்து பாடசாலையில் விளையாட்டு மற்றும் கல்வி என்பவற்றில் சிறப்புச் சித்தி பெற்றதாகவும் இதனால் அன்று கிளிநொச்சியில் தலைவராக திகழ்ந்த வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் சான்றிதழ் மற்றும் பதக்கத்தையும் பெற்றதாகவும் இதன் அடிப்படையிலேயே தனது மகள் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார். (ச-5)

# கண்ணிவெடிகள் அகற்றப்படாததாலேயே முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டனர்

## முல்லை அரச அதிபர் விளக்கம்

கண்ணிவெடிகள் அகற்றப்படாத இடம் ஒன்றில் குடியேற முயற்சித்தமையை அடுத்தே தாம் முஸ்லிம் மக்களை அங்கிருந்து வெளியேற்றக் கோரியதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் சுமத்திய குற்றச்சாட்டுக்கே இமெல்டா சுகுமார் இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்தின்போது வியாபார நோக்கத்திற்காக வந்த முஸ்லிம்கள் கண்ணிவெடிகள் அகற்றப்படாத இடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தங்கியிருந்த போதே அவர்களை அங்கிருந்து செல்லக் கூறியதாக அரசாங்க அதிபர் கூறியுள்ளார்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாக படையினரும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் உறுதிசெய்த பின்னரே மக்கள் மீள் குடியமர்த்தப்படுகின்றனர். இதில் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்கள் என்ற பேதங்கள் இல்லை என்றும்அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் இந்த விடயம் குறித்து தம்முடன் தொலைபேசியில் உரையாடும்போது தம்மை பயமுறுத்தி மிரட்டும் வகையில் பேசியதாக இமெல்டா சுகுமார் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் அரசாங்க அதிகாரி ஒருவருடன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரியவில்லை எனக் குறிப்பிட்ட அவர், அரசியல்வாதிகளின் விருப்பத்திற்கு ஏற்ப மீள்குடியேற்றங்களை மேற்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

(ச-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## வீர இளைஞருக்கு




முதலில் நாம் தெய்வங்களாவோம். பிறகு பிறருக்கும் தெய்வங்களாகத் துணை செய்வோம். “ஆகுக”, “ஆக்குக” இதுவே நமது தாரக மந்திரம் ஆகட்டும்.

எழுந்திருங்கள், உழையுங்கள். இந்த வாழ்வு எத்தனை நாளைக்கு? உலகில் வந்து விட்டீர்கள். அதற்கு அறிகுறியாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லாவிட்டால், உங்களுக்கும் மரங்கள் மற்றும் கற்களுக்கும் என்ன வேறுபாடு ? அவையும் தோன்றுகின்றன, கெடுகின்றன, மறைகின்றன.

# தமிழக முகாம்களிலுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தர குடியுரிமையை மத்திய அரசு வழங்க வேண்டும்

## தி.மு.க. செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றம்



தமிழக முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்களுக்கு நிரந்தர குடியுரிமை கிடைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி தி.மு.க. உயர்நிலை செயல்திட்ட குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க.உயர்நிலை செயல்திட்ட குழு கூட்டம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் இலங்கையில் போர் முடிந்து ஏறத்தாழ ஓராண்டுக்கு மேல் ஆகியும் இலங்கையில் தேர்தல்கள் நடைபெற்ற புதிய அரசு அமைந்த பின்னருங்கூட போரினால் பாதிக்கப்பட்ட சுமார் இரண்டரை இலட்சம் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் சொந்த வீடுகளில் சென்று வாழ முடியாத நிலை இன்னமும் நீடித்துக் கொண்டிருக்கிறது.

ஏதாவது ஒரு காரணத்திற்காகத் தடுக்கப்பட்டு இன்னமும் முகாம்களில் வாழக் கூடிய சோகமான நிலைமை தொடர்ந்து கொண்டிருப்பதும் நமக்கெல்லாம் மிகுந்த வேதனையையும் கவலையையும் அளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இன்னமும் தற்காலிக முகாம்களில் உள்ள தமிழர்கள் உடனடியாக அங்கிருந்து விடுவிக்கப்பட்டு அவர்கள் தத்தமது சொந்த வீடுகளுக்குச் சென்று வாழ்வதற்கான வழிவகை ஏற்படுத்தப்பட வேண்டும். சொந்தப் பகுதிகளுக்குச் சென்று இன்னமும் தவித்துக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கும் உடனடியாக அவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்கள் செய்து தரப்பட வேண்டும்.


சர்வதேசப் பரிமாணங்களை அடைந்துள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய தேவையைப்பற்றி இலங்கை அரசுக்கு பல்வேறு நிலைகளில் இந்திய அரசு நிர்ப்பந்தம் செலுத்தி வருகிறது. இலங்கைத் தமிழர் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக இந்திய மத்திய அரசு 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

எனினும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ள 500 கோடி ரூபாயை இலங்கைத் தமிழர்களுக்காக முறையாகப் பயன்படுத்திடத் தக்க திட்ட வரைவுகளை இலங்கை அரசு செய்திட இன்னமும் முன்வரவில்லை என்பது வேதனையிலும் வேதனையான செய்தியாகும்.

எனவே இந்திய அரசு மனமுவந்து இலங்கைத் தமிழர்களுக்காக ஒதுக்கீடு செய்துள்ள 500 கோடி ரூபாயை உடனடியாக இலங்கைத் தமிழர்களுக்காகப் பயன்படுத்திட இலங்கை அரசை இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டுமென்று இந்த உயர்நிலை செயல் திட்டக்குழு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. தமிழகத்தில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கும் 73 ஆயிரத்து572 இலங்கைத் தமிழர்களை இந்தியக் குடியுரிமைச் சட்டம் மற்றும் தொடர்புடைய ஏனைய சட்டங்களின் கீழ் மறுகுடிய மர்த்தும் முயற்சியாக மத்திய அரசோடு கலந்து பேசி அவர்கள் அனைவரும் தமிழகத்திலே நிரந்தரமாகக் குடியிருக்க வழிவகை செய்து தர வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் தீர்மானித்து இது தொடர்பில் மத்திய அரசை ஏற்கனவே கேட்டுக் கொண்டும் இதுவரையில் மத்திய அரசு அது குறித்து தீவிரமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்டுவதோடு இனியாவது இந்தப் பிரச்சினையில் ஆக்க பூர்வமான அணுகு முறையை கையாண்டு துயருறும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இலங்கையிலிருந்து வெளியேறி மலேசியாவிற்கு அகதிகளாகச் சென்ற பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 75 இலங்கைத் தமிழர்கள் மலேசிய அரசினால் சிறைபிடிக்கப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மலேசியாவில் சிறைபட்டுள்ள 75 இலங்கை தமிழர் களை காப்பாற்றிட கருணை உள்ளத்தோடு முன்வர வேண்டுமென்று மத்திய அரசை கேட்டுக் கொள்கிறது என தி.மு.க செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (5-4)

# மாம்பழம் அனுப்பிய மன்மோகனுக்கு நன்றி தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர்





மாம்பழம் அனுப்பியதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு பாகிஸ்தான் பிரதமர் கிலானி நன்றி தெரிவித்துள்ளார்.

நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் பிரதமர் கிலானிக்கு அல்போன்சா ரக மாம்பழங்கள் இந்திய பிரதமர் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டது.

அதை பெற்றுக் கொண்ட பிரதமர் கிலானி வெளியிட்ட செய்தியில் மாம்பழம் அனுப்பியதற்கு நன்றி. அவற்றை நானும் என் குடும்பத்தாரும் ருசித்து உண்டோம் என தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் 1980 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி பாகிஸ்தானின் அப்போதையை இராணுவ தலைவர் ஜியா உல் ஹக்குக்கு மாம்பழங்கள் அனுப்பி வைத்தார்.

2001 ஆம் ஆண்டு பர்வேஷ் முஷாரப் இந்திய பிரதமர் வாஜ்பாயிக்கு மாம்பழங்களை அனுப்பி வைத்தார். இருநாட்டு அரசியல் வரலாற்றில் மாம்பழராஜதந்திரம் என்று குறிப்பிடும் அளவுக்கு இந்த பழக்கம் ஒன்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (5-4)

# நக்சல் தீவிரவாதிகளை ஒடுக்க படையினரை பயன்படுத்துவதா?

## இந்திய பாதுகாப்பு அமைச்சர் பேட்டி.

(புனே)

நக்சல் ஆதிக்கத்தை ஒடுக்குவதில் இந்திய இராணுவத்தை பயன்படுத்துவது குறித்து இன்னும் முடிபு எடுக்கவில்லை என்று மத்திய இராணுவத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்துள்ளார்.

டில்லியில் உள்ள தேசிய இராணுவ அகடமியில் நடந்த படைகளின் அணி வகுப்பை பார்வையிட்ட அவர், பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

காஸ்மீரில் சமீபமாக ஊடுருவல்கள் அதிகரித்துள்ளன. இருப்பினும் அப்பகுதியில் இராணுவம் மற்றும் துணை நிலை இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து மத்திய அரசு இன்னும் முடிபு எடுக்கவில்லை. ஊடுருவலை தடுப்பது குறித்து காஸ்மீர் மாநில அரசுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. நக்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்க மத்திய அரசு முடிபு செய்துள்ளது.

பாதுகாப்புப்படையினர் தங்கள் பணியில் மிகவும் கண்காணிப்புடன் இருக்க வேண்டும். மேலும் மாறும் சூழலுக்கு தயாராக இருக்கவேண்டும். பயங்கரவாதத்தை எதிர் கொள்வதில் நவீன் தொழில் நுட்பத்தை பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

எதிர்காலத்தில் போர் எப்படி இருக்கும் என்று கண்காணிக்க முடியாது. சம்பிரதாய மரபுப் படி அல்லது எந்த நடைமுறைகளையும் பின்பற்றாத போராக அமையலாம். அவைகளைச் சந்திக்க தகுதியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்தார். (5-4)

# எஸ்.எம். கிருஷ்ணா அமெரிக்கா பயணம்

(சென்னை)

இந்திய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர்களுக்கிடையே வோஷிங்டனில் நடைபெறும் பேச்சுவார்த்தை இரு நாடுகளின் உறவை வலுப்படுத்தும் என்று மத்திய அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜூன் 3 ஆம் திகதி நடைபெறும் அந்த பேச்சுவார்த்தையில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, அமெரிக்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

இதற்காக மத்திய அமைச்சர் கபில்சிபில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் உள்ளிட்டோர் அடங்கிய உயர்மட்ட குழு எஸ்.எம். கிருஷ்ணா தலைமையில் அமெரிக்கா பயணமாகியுள்ளது. (4-5)

# பாரதச் செய்திகள்

# இந்திய மாவோயிஸ்ட் தாக்குதலில் மே மாதத்தில் 201 பேர் பலி;

## உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தகவல்

(புதுடில்லி)

மே மாதத்தில் மட்டும் மாவோயிஸ்ட் தாக்குதலில் 201 பேர் பலியாகியுள்ளதாக இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் ஞானேஸ்வரி எக்ஸ்பிரஸ் ரயில் , சரக்கு ரயில் ஒன்றுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் 147 பேர் உயிரிழந்ததற்கு மாவோயிஸ்ட்டுக்களின் மேல் சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மே மாதத்தில் மத்திய உள் துறை அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை ப.சிதம்பரம் நேற்று சமர்ப்பித்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் வருமாறு,

மே மாதத்தில் மாவோயிஸ்ட்டுக்கள் அதிக அளவில் வன்முறைத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். மே 8 ஆம் திகதி சி.ஆர்.பி.எவ். வாகனத்தை சத்தீஸ்கரின் பிஜாப்பூர் மாவட்டம் கண்ணிவெடித் தாக்குதலில் 8 சி.ஆர்.பி.எவ்.வீரர்கள் கொல்லப்பட்டனர்.மே 12ஆம் திகதியும் 16ஆம் திகதியும் சத்தீஸ்கரில் 10 பேர் கடத்திக்கொல்லப்பட்டனர்.

மே 17ஆம் திகதி பயணிகள் பேரூந்தை மாவோயிஸ்ட்டுக்கள் ஜார்க்கண்டின் தாண்டே வாடா மாவட்டத்தில் கண்ணிவெடி வைத்து தகர்த்ததில் 15 பொதுமக்களும் 16 பொலிஸாரும் கொல்லப்பட்டனர். 19ஆம் திகதி மேற்கு வங்கத்தின் மேற்கு மிட்னாபூர் மாவட்டத்தில் சி.ஆர்.பி.எவ்.வாகனத்தை கண்ணிவெடி வைத்து தாக்கியதில் 5 பேர் கொல்லப்பட்டனர். மே 28ஆம் திகதி மேற்கு வங்கத்தில் தண்டவாளம் பெயர்க்கப்பட்டு ரயில் தடம் புரண்டு ஞானேஸ்வரி எக்ஸ்பிரஸ் ரயில் சரக்கு ரயில் ஒன்றுடன் மோதி 147 பேர் உயிரிழந்தனர்.

இதற்கு மாவோயிஸ்ட்டுக்களின் மேல் சந்தேகம் எழுந்துள்ளது. ஆயினும் விசாரணைக்குப் பின்னரே குற்றவாளிகள் அடையாளம் காணப்படுவார்கள்.



நக்சலைட்டுக்களால் பாதிக்கப்பட்டுள்ள 9 மாநிலங்களுக்கான ரூபா 331.12 கோடி மதிப்பீட்டில் செயற்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4)

## சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தி 9 விக்கெட்டுக்களால் வென்றது பற்றிக்ஸ்

எரிக் பிரதாப்பின் பந்துவீச்சில் 63 ஓட்டங்களுக்குள் சுருண்டது சென் ஜோன்ஸ் கல்லூரி. சென் பற்றிக்ஸ் கல்லூரி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை ஒட்டி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகளுக்கிடையில் இருபது -20 கிரிக்கெட்சுற்றுப்போட்டி ஒன்றினை தனது மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் நடத்திவருகிறது.

நேற்று செவ்வாய்க்கிழமை பகல் நடைபெற்ற போட்டி ஒன்றில் சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்துசென்ஜோன்ஸ்கல்லூரிஅணிமோதியது.

நாணயச்சுழற்சியில்வென்றசென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப் பெடுத்தாட களமிறங்கிய சென் ஜோன்ஸ்கல்லூரி அணி ஓட்டங்களை எடுக்கத் திணறியது. அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழக்க சென் ஜோன்ஸ் கல்லூரி 17.2 ஓவர்களில் 63 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் டக்ஸன், கவாஸ்கர் முறையே 13,12 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென் பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக எரிக் பிரதாப் 4 விக்கெட்டுக்களையும், அஜித் டார்வின் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

64 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரி 8.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மாத்திரமிழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ரியூடன் 27 ஓட்டங்களையும் ஜெகான் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (ச-5)

# சுழல் கூட்டணி பந்துவீச்சில் அசத்தல் இலங்கை அணிக்கு இலகு வெற்றி



(புலவாயோ)

சகல துறையிலும் ஜொலித்த இலங்கை அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை இலகுவாக வீழ்த்தியது.

இலங்கை, சிம்பாவே மற்றும் இந்தியா அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் சிம்பாவேயில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று புலவாயாவில் நடை பெற்ற முதல் சுற்றின் மூன்றாவது போட்டியில் இலங்கை சிம்பாவே அணிகள் மோதின.

இப் போட்டி மழைகாரணமாக தாமதமாக ஆரம்பமானதால் தலா 26 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக நடத்த தீர்மானிக்கப்பட்டது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு ஆரம்பம் முதலே விக்கெட்டுக்கள் சரிந்தன. எனினும் ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சரிந்தாலும் மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மசகட்ஷா அதிரடி சதம் அடித்து நம்பிக்கையளித்தார்.

இந் நிலையில் சிம்பாவே அணி 24.5 ஓவர்களில் 118 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் மசகட்சா 69 பந்துகளில் (4பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 62 ஓட்டங் களை எடுத்தார். பந்துவீச்சில் ராண்டில் 3 விக்கெட்டுக்களையும் பெனான்டோ, அஜந்த மெண்டிஸ், அறிமுக வீரர் ஜீவன் மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 26 ஓவர்களில் 119 ஓட்டங்களை எடுத்தால்வெற்றி என்ற இலக்குடன் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி டில்சானின் அதிரடியின் மூலம் 15.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 119ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட்டுக்களால் இலகுவாக வெற்றிபெற்றது.

இதில் அணித்தலைவர் திலகரட்ண டில்சான் ஆட்டமிழக்காமல் 44 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 59 ஓட்டங்களையும் உப்புல் தரங்க 37 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இவ்வெற்றியின்மூலம் இலங்கை அணிக்கு 5 புள்ளிகள் கிடைத்தது. இத் தொடரில் இந்தியா, சிம்பாவே அணி தலா 4 புள்ளிகளுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஜனுதாஸ், ஆதித்தன் சிறப்பான ஆட்டம்

## மானிப்பாய் இந்துக்கல்லூரியை கொக்குவில் இந்து வெற்றிபெற்றது

ஜனுதாஸ், ஆதித்தன் ஆகியோரின் சிறப்பான துடுப் பாட்டத்தினால் மானிப்பாய் இந்துக் கல்லூரியை 65 ஓட்டங்களால் வென்றது கொக்குவில் இந்துக்கல்லூரி.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவினையொட்டி யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த 10 பாடசாலைகளுக் கிடையில் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றினை தனது மைதானத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை தொடக்கம் நடத்திவருகின்றது.

முதல் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

ஆரம்ப விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து வீழ்ந்த போதும் ஓட்டங்களை ஓவருக்கு 8 என்ற வீதத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி கொண்டு சென்றது. இராகுலன், ஜனுதாஸ், ஆதித்தன் ஆகியோரின் துடுப்பாட்டத்தினால் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் ஜனுதாஸ், ஆதித்தன், இராகுலன் முறையே 34, 38, 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சார்பாக ஹரிதரன் 3 விக்கெட்டுக்களையும், யாழினியன், உமா சங்கர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

176 என்ற வெற்றியிழக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆரம்பம் முதல் விக்கெட்டுக்களை இழந்து நிலைதடு மாறியது.

20 ஓவர்கள் நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 8 விக்கெட்டுக்களையிழந்து 110 ஓட்டங்களை மட்டும் பெற்று 65 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. 8 ஆவது விக்கெட்டிற்காக களமிறங்கிய பிரசன்னா சற்றுச் சிறப் பான ஆட்டத்தினை வெளிப்படுத்தி 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். கூடவே அன்சிலிலி 19 ஓட்டங்களைப்பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக ஜனுதாஸ் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.


# பிரேசில் அணியின் ஆறாவது அதிசயம்

இந்தியா போன்ற நாடுகள் உலகக் கோப்பை கால்பந்தாட்டத் தொடருக்கு தகுதிகூட பெற முடியவில்லை. ஆனால் உலகின் நம்பர்-1 அணியான பிரேசில், ஆறாவது முறையாக கோப்பை கைப்பற்ற காத்திருக்கிறது. இம் முறை தென்னாபிரிக்க மண்ணில் சாதிக்கும் பட்சத்தில் அனைத்துக் கண்டங்களிலும் சம்பியன் பட்டம் வென்ற ஒரே அணி என்ற சாதனை படைக்கலாம்.

உலகக் கோப்பை கால்பந்தாட்ட அரங்கில் பிரேசிலின் ஆதிக்கம் மிக நீண்டகாலமாக காணப்படுகிறது. அனைத்துத் தொடருக்கும் தகுதிபெற்ற இந்த அணி, பீலேவின் எழுச்சி கைகொடுக்க, 1958இல் (இடம்-சுவீடன், கண்டம்-ஐரோப்பா) முதல் முறையாக கோப்பை வென்றது. பின் 1962 (இடம்-சிலின், கண்டம்-தென்னமெரிக்கா) 1970 (இடம்-மெக்ஸிக்கோ, கண்டம்-வடஅமெரிக்கா) 1994 (இடம்-அமெரிக்கா, கண்டம் வடஅமெரிக்கா) 2002 (இடம்-கொரியா மற்றும் ஜப்பான், கண்டம்-ஆசியா) கோப்பையைக் கைப்பற்றியது.

இதன்மூலம் அதிக முறை கோப்பை (05) வென்ற அணியின் வரிசையில் முதலிடம் பெற்றது. இரண்டாவது இடத்தில் இத்தாலி (04) உள்ளது.

இந் நிலையில் ஜுன் 11ஆம் திகதி 19 ஆவது உலகக்கோப்பை கால்பந்தாட்டத்



தொடர் தென்னாபிரிக்காவில் (ஆபிரிக்கா கண்டம்) ஆரம்பமாகிறது. அதில் பிரேசில் அணி அசத்தினால் இதுவரை உலகக் கோப்பை போட்டிகள் நடந்துள்ள அனைத்துக் கண்டங்களிலும் கோப்பை வென்ற அணி என்ற பெருமை பெறலாம்.

**றொனால்டோ இல்லை**

இம்முறை பிரேசில் முற்றிலும் புதிய அணியாக காட்சியளிக்கிறது. அதில் பிரபலமான 'ஆர்' கூட்டணியில்லாமல் களமிறங்குகிறது. உலகக் கோப்பை வரலாற்றில் அதிக கோல் (15) அடித்த பெருமைமிக்க 33 வயதான றொனால்டோ நீக்கப்பட்டது பலவீனம் தான். அடிக்கடி முழங்கால் காயத்தால் அவதிப்படும் இவரால் பயனில்லை என, பயிற்சியாளர் துங்கா கருதுகிறார்.

ராபர்ட்டோ கார்லஸ் ஓய்வுபெற்றுவிட்டார். 30 வயதான றொனால்டோவை பொறுத்த வரை 23 பேர் அடங்கிய இறுதிப் பட்டியலில் இடம்பெறவில்லை. ஆனால் ரிசர்வ் வீரர் களின் பட்டியலில்வாய்ப்புபெற்றுள்ளது ஆறுதலான விடயம்.

**காக்கா நம்பிக்கை**

பயிற்சியாளர் துங்காவை பொறுத்தவரை திறமைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். கடந்த 1994இல் அணிக்கு கோப்பை பெற்று தந்த இவர் தற்காப்பு பகுதி பலமாக இருக்க வேண்டும் என நினைக்கிறார் டானியல் ஆல்வ்ஸ் தியாகோ சில்வா, ஜுவான் போன்ற சிறந்த தற்காப்பு பகுதி வீரர்கள் இடம் பெற்றிருப்பது பலம். மத்திய கள பகுதியில் பம்பரமாக சுழன்று ஆடக் கூடிய காக்கா உள்ளார். இவரை தான் ரசிகர்கள் அதிகம் நம்பியுள்ளனர்.

முன்களத்தில் ரோபின்ஹோ, லூயிஸ் பாபியோனா போன்றோர் கோல் அடிக்க தயாராக உள்ளனர். கார்லோஸ் இடத்தை மிச்சல் பாஸ்டாஸ் நிரப்ப காத்திருக்கிறார்.

மிகவும் கடினமான ஜி பிரிவில் இடம் பெற்றுள்ள பிரேசில் அணி போர்த்துக்கல், ஐவரிகோஸ்ட், வடகொரியா உள்ளிட்ட சம பலம் வாய்ந்த அணிகளை சமாளிக்க வேண்டும். கடந்த 2006இல் காலிறுதியோடு வெளியேறிய பிரேசில் அணி, இம்முறை 6ஆவது உலக கோப்பை கைப்பற்றி அதிசயம் நிகழ்த்துமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# ஹார்ஸ்ற் அசத்தல்; இங்கிலாந்து சம்பியன்



எட்டாவது உலகக்கிண்ணக் கால்பந்தாட்ட தொடர் 1966ஆம் ஆண்டு யூலை 11 ஆம் திகதி முதல் 30ஆம் திகதிவரை இங்கிலாந்தில் நடத்தப்பட்டது.

இம் முறையும் 16 அணிகள் உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் பங்கேற்க தகுதி பெற்றன.

முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்று இங்கிலாந்து, ஆர்ஜென்டீனா, போர்த்துக்கல், கொரியா, மேற்கு ஜேர்மனி, உருகுவே, சோவியத் யூனியன் மற்றும் ஹங்கேரி ஆகிய 8 அணிகள் காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறின.

இதில் இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் ஆர்ஜென்டீனா அணியையும் போர்த்துக்கல் அணி 5-3 என்ற கோல்கணக்கில் கொரியா அணியையும் மேற்கு ஜேர்மனி 4-0 என்ற கணக்கில் உருகுவே அணியையும் சோவியத் யூனியன் அணி 2-1 என்ற கணக்கில் ஹங்கேரி அணியையும் வீழ்த்தி அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறின.

முதலாவது அரையிறுதியில் மேற்கு ஜேர்மனி அணி (2-1) சோவியத்யூனியன் அணியையும் இரண்டாவது அரையிறுதியில் இங்கிலாந்து அணி (2-1) போர்த்துக்கல் அணியையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

இங்கிலாந்து வேம்ப்லி மைதானத்தில் 98 ஆயிரம் இரசிகர் கூடியிருக்க இறுதிப் போட்டி பரபரப்பாக நடைபெற்றது.

போட்டியின் 12ஆவது நிமிடத்தில் மேற்கு ஜேர்மனி வீரர் ஹல்மற் ஹால்லர் முதலாவது கோல் அடித்தார். அடுத்த 4 நிமிடங்களில் இங்கிலாந்து வீரர் ஜீபோப் ஹார்ஸ்ற் கோல் அடிக்க போட்டி சமனானது. 78ஆவது நிமி





டத்தில் மார்டீன் பீற்றர்ஸ் கோல் அடிக்க இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

எனினும் இங்கிலாந்து அணிக்கு எதிராக போட்டி நடுவரால் மேற்கு ஜேர்மனி அணிக்கு மேலதிக உதை வழங்கப்பட்டது. இதனை சாதகமாகக் கொண்டு வோல்காவ் வேப்பர் கோல் அடிக்க போட்டி 2-2 என்ற கணக்கில் சமனிலையானது.

இதனால் போட்டியில் வெற்றியாளரை தீர்மானிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள். இதில் 8ஆவது நிமிடத்தில் ஹார்ஸ்ற் அடித்த பந்து கோல் இலக்கின் மேல் பகுதியில் (Cross Bar) பட்டு மைதானத்தில் வீழ்ந்து கோல் இலக் குக்குள் சென்றது.

இது நடுவர்களால் ஆலோசித்து கோல் என அறிவிக்கப்பட்டது. அடுத்துப் போட்டியின் இறுதி நிமிடத்தில் 100ஆவது நிமிடம் ஹார்ஸ்ற் மீண்டும் கோல் அடித்து அசத்த இங்கிலாந்து அணி முதல் முறையாக உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன் மூலம் தனது சொந்தமண்ணில் விளையாடி இங்கிலாந்து ஹார்ஸ்றின் அசத்தலான ஆட்டத்தின் மூலம் சாதித்தது. தொடரின் மூன்றாவது இடத்தை போர்த்துக்கல் அணி பெற்றது.




கொழும்பில் நடைபெறவுள்ள ஐஃபா திரைப்பட விழாவில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள இந்திய பொலிவூட் கலைஞர்கள் மற்றும் இலங்கையில் பிறந்த பொலிவூட் நடிகை ஜெக்யூலின் பெர்னாட்சா ஆகியோர் நேற்று மாலை இடம்பெற்ற அலங்காரக் கண்காட்சியில் பங்குபற்றியதைப் படங்களில் காணலாம்.

## அரசியல்...

போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள இந்தியா, மகிந்தவின் இந்திய விஜயத்தின் போது இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உடன்படிக்கையிலும் கைச்சாத்திடத் திட்டமிட்டுள்ளது.

புதுடில்லி செல்லும் ஜனாதிபதி மகிந்த, இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி உட்பட காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர்களை சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## வடக்கின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலம் வன்னி மக்களின் அவலங்களுக்குத் தீர்வு காண முடியும்.

அண்மையில் வட மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட போது வன்னி மக்கள் எதிர்நோக்கி வரும் அவல நிலைமைகளை நேரில் பார்வையிட்டோம்.

மீள்குடியேற்றம் தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கம் காட்டும் விதம் ரம்யமானது என்ற போதிலும் உண்மை நிலைமை முற்றிலும் மாறுபட்டது.

எதிர்வரும் வட மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது பிரதேச மக்கள் எதிர்நோக்கி வரும் அவல நிலைமைகளை அம்பலப்படுத்தத் தமது கட்சி திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## படிப்பினை...

அந்தநாட்டுஅரசாங்கமேமுடிவெடுக்கவேண்டும்.

வெளிநாட்டிலிருந்து தீர்வை இறக்குமதி செய்யக் கூடாது என்ற விடயத்தில் அமெரிக்கா இலங்கையுடன் இணைந்துள்ளது என்றார்.

இதேவேளை இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் குறித்தும் அமெரிக்கா மகிழ்ச்சி தெரிவித்ததாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (ச-5)

## இலங்கை...

இந்த நிலையில் தம்மை மூன்றாம் நாடு ஒன்றில் குடியேற்ற அனுமதிக்க வேண்டும் எனக் கோரி இந்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

உண்ணாவிரதிகள் போராட்டம் காரணமாக சேர்வடைந்திருந்த நிலையில் நேற்று மலேசியாவின் மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனப் பணிப்பாளர் கலைவாணர், மலேசியப் பிரதம மந்திரியைச் சந்தித்து, தம்மை இலங்கைக்கு மீண்டும் அனுப்பப் போவதில்லை என்பது உட்பட்ட மூன்று கோரிக்கைகளுக்கு இணக்கம்.கண்டதையடுத்தே தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்திக் கொண்டதாக அகதிகளில் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## பிரபாகரனின் பாடசாலை...

இரண்டு வருடங்களும் 9 மாதங்களும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த குணசுந்தரம் ஜெயசுந்தரம் என்பவரை விடுதலை செய்யுமாறு அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ. விநாயகமூர்த்தி நீதிபதிகளிடம் கோரினார்.

இதற்கு அரச சட்டத்தரணி, குணசுந்தரம் ஜெயசுந்தரம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்படவுள்ளமையினால் உடனடியாக விடுதலை செய்ய முடியாது எனத் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் மலேசிய நிறுவனம் ஒன்றிலிருந்து கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்தமை மற்றும் யுத்த தளபாடங்களை இலங்கைக்கு அனுப்பியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பவங்கள் தொடர்பாக இரகசிய அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்குமாறும் இதற்கமைய ஜூலை மாதம் 30 ஆம் திகதி வரை உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது. (ச-9)

## அரசியல் சாசனத் திருத்தத்...

பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீபா வர்த்தக உடன்படிக்கை மற்றும் 13-வது அரசியல் சாசனத் திருத்தம் ஆகியவற்றுக்கு எதிராக பாரிய பிரசாரங்களை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மற்றும் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோருக்குத் தனிப்பட்ட ரீதியில் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன் அடிப்படையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இந்தியாவின் அழுத்தங்களுக்கு எதிராக அடுத்த சில தினங்களில் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## நவநீதம்பிள்ளையின் கூற்றுக்கு...

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது இலங்கை அரசு போர்க் குற்றங்கள் செய்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக சர்வதேச நீதிமன்ற விசாரணைகள் அவசியம் என மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று முன்தினம் ஜெனீவாவில் வைத்து மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இது ஒரு நியாயமற்ற நடவடிக்கை என்றே நாங்கள் நினைக்கின்றோம். இது ஒரு அடக்குமுறை கொண்ட நடவடிக்கையும் கூட.

இலங்கையைத் துன்புறுத்துவதில் வெற்றி காணும்வரை சிலருக்கு ஓய்வு கிட்டாது போல் இருக்கின்றது என்று சாடியுள்ளார். கடந்த ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தின் போது மக்கள் மீது இரு தரப்பும் வேண்டும் என்றே தாக்குதல் நடத்தின.

அல்லது வகைதொகையற்ற தாக்குதலில் மக்கள் சிக்கியதுபோன்ற செயல்கள் நடைபெற்றுள்ளன. இது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று மேற்கத்தைய நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் கூறுகின்றன.

போர்க் குற்றங்கள் பற்றி கூறப்படும் குற்றச்சாட்டுக்களை இலங்கை தொடர்ந்து மறுத்து வருகின்றது. விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் பலர் கொல்லப்பட்ட நிலையில் போர்க் குற்ற விசாரணை என்று வந்தால் அது அரச தரப்பின் செயற்பாடுகளை ஆய்வதாக இருக்கும் என்பதால் இது போன்ற கோரிக்கைகள் இலங்கைக்கு ஆத்திரத்தைத் தருவதாக உள்ளன.

இதேவேளை நவநீதம்பிள்ளையின் இந்தக் கூற்றை வன்மையாகக் கண்டிப்பதாகக் குறிப்பிடும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் இப்படி இலங்கை மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு எவ்விதமான அடிப்படையும் இல்லை எனவும் இதற்கு முன்னர் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது இலங்கைக்கு ஆதரவாக வாக்குகள் கிடைத்தும் இந்தப் பிரச்சினை ஏன் இன்னமும் முடிவுக்கு வரவில்லை என்று தமக்குத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டார்.

நவநீதம்பிள்ளை ஐ.நாவில் உள்ள ஒரு அதிகாரி. அவர் ஒரு அரசியல்வாதி அல்ல. இலங்கை விவகாரம் தொடர்பில் அவரால் எதுவும் கூற முடியாது.

சர்வதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் இது தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதுடன் அவர்கள் தீர்மானம் ஒன்றையும் வெளியிட்டனர்.

அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாமல் இரண்டாவது, மூன்றாவது ஏன் நான்காவது தடவையாகவும் தொடர்ந்தும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையை அழிப்பதற்கும் சர்வதேசத்தில் இலங்கை கொண்டுள்ள நற்பெயரைக் கெடுப்பதற்குமாக முன்னெடுத்துச் செல்லும் இந்தச் செயற்றிட்டத்திற்கு முடிபில்லை என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் இலங்கைக்கு அநீதி ஏற்படுவதுடன் இவ்வாறான செயற்பாடுகள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை மீறும் செயல் என்றும் குற்றஞ்சுமத்தினார்.

அத்துடன் நவநீதம்பிள்ளையின் பேச்சு எடுபடவில்லை எனக் குறிப்பிட்ட வெளிவிவகார அமைச்சர், இது முதற் தடவையாக எழுந்த பிரச்சினையல்ல. இது தொடர்பில் பல விவாதங்கள் நடைபெற்று ஆராய்ச்சிகள் மூலம் இதற்குத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினார். (ச-3,5,9)

**ஆங்கில மொழியில் தரமான மூன்று நூல்கள்**

Three Guide Books to better Your Writing Skills

ஆக்கியோன்: த.ந.பஞ்சாட்சரம்

01. Beginnings of Writing Composition for Grades Six to Nine
02. Writing Letters in English
03. 165 Model Essays

யாழ்.நகர் முன்னணி புத்தகசாலைகள் அனைத்திலும் கிடைக்கும்.

**பிள்ளையார் இன் 'A' தரம் உல்லாசப் பயணிகள் தங்கும் இடம்**

**('A' GRADE HOTEL APPROVED BY THE CEYLON TOURIST BOARD)**

றூவ் காடின் றெஸ்றோறன்ட் கொபி சொப் றெஸ்றோறன்ட் கொக் றெயில்ஸ் **(COCKTAILS AND CHILLED BEER)** மீண்டும் இயங்க ஆரம்பித்து விட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இவை யாவும் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் மீண்டும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும்.

மதுசாலை மேற்கூறிய நேரங்களில் மட்டும் திறந்திருக்கும் என்பதைக் கவனிக்கவும். இந்திய சமையல் வல்லுநரால் சாப்பாடுகளும் தயாரித்து வழங்கப்படும். குறைந்தது ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் ஓடர் செய்து விட்டு வரவும். 24 A/C அறைகள், விசாலமான வாகனத் தரிப்பிடம், சிறப்பான உபசரிப்புகள் யாவுக்கும் நாட வேண்டிய இடம்:-

TEL:- 021 222 2829
FAX:- 021 222 4449
E.MAIL:- pillaiyar.in@gmail.com

**PILLAIYAR INN**
31, MANIPAY ROAD,
JAFFNA. (1612)

## அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில் நாளை புதன்கிழமை முதல்
ஐரோப்பாவில் இருந்து எண்ஜோதிட நிபுணர்

**பேராசிரியர் ராஜராயேந்திரன்**

எழுதும் **நவீன எண்ஜோதிடம்** வெளிவரும். வாசிக்கத் தவறாதீர்கள்!

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.